# ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு

## பகுதி 4

**(The Revelation of The Seven Trumpets – Part 4)**

பிப்ரவரி **28, 2016,** கல்வாரி சபை, சென்னை

**(February 28, 2016, Calvary Tabernacle, Chennai)**

போதகர் **A.** சாமுவேல்

**(Pastor A. Samuel)**

வானத்தையும் பூமியையும், அதில் உள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்த சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறோம். யேகோவா தேவனே, உம்மைத் துதிக்கிறோம். எங்களுக்காக மாம்சத்தில் வெளிப்பட்ட கர்த்தராகிய இயேசுவே, உம்மைத் துதிக்கிறோம். பரிசுத்த ஆவியாக எங்களுக்குள் வாசமாயிருக்கிறவரே, உம்மைத் துதிக்கிறோம். உலகத்தோற்றத்திற்கு முன்பாக எங்களை நீர் உம்முடைய சிந்தையில் வைத்திருந்தீர். இப்பொழுது எங்களை நீர் காட்சியிலே கொண்டுவந்திருக்கிறீர். வெளிப்படுத்தப்பட்டத் தன்மையாக **(Expressed Attribute)** நீர் எங்களை மாற்றி இருக்கிறீர். கர்த்தாவே, உம்முடைய மனதில் உள்ளதை நீர் நிறைவேற்றியிருக்கிறீர். எங்களை நீர் காட்சியிலே கொண்டுவந்து, உம்முடைய வார்த்தையிலே கொண்டுவந்ததற்காக ஸ்தோத்திரம். உம்முடைய வார்த்தையானது எங்களுடைய ஆத்துமாவை உயிர்ப்பித்து, எங்களை உம்முடைய குமாரரும், குமாரத்திகளுமாய் மாற்றியிருக்கிறது.

நாங்கள் மாம்சத்துக்குரியவர்களாய் இராதபடி, ஆவிக்குரியவர்களாய் எங்களை மாற்றியிருக்கிறீர். கர்த்தாவே, நாங்கள் உலகத்துக்குரியவர்களாய் இராதபடி உன்னதத்திற்குரியவர்களாக எங்களை நீர் மாற்றியிருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகும். உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. உலகத்தில் இருந்து நீர் எங்களை வெளியே அழைத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். பாபிலோனைவிட்டு வெளியே அழைத்ததற்காக ஸ்தோத்திரம். ஆண்டவரே, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசமான வார்த்தையிலே எங்களை கொண்டுவந்ததற்காக நன்றி செலுத்துகிறோம்.

இதுவரைக்கும் நீர் வெளிப்படுத்தின எல்லா சத்தியங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுடைய ஜெபங்களை நீர் கேட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் விசுவாசித்த வாக்குத்தத்தமான வசனத்தை எங்கள் வாழ்க்கையிலே நீர் நிறைவேற்றினதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம் ஆண்டவரே. இன்றைக்கும் நீர் ஜீவிக்கிற தேவனாய் இருக்கிறீர். பலமுள்ள கிறிஸ்துவாக இறங்கி வந்திருக்கிறீர். எங்களுக்கு முன்னே நீர் சென்றுகொண்டிருக்கிறீர். எங்கள் மத்தியிலே நீர் அசைவாடுகிறீர். எங்களுடைய வியாதிகளை சுகமாக்குகிறீர். எங்களுடைய ஆகாரத்தை நீர் ஆசீர்வதிக்கிறீர். வருமானத்தை நீர்

ஆசீர்வதிக்கிறீர். ஆண்டவரே, கடந்த நாட்களில் நீர் எங்களுக்கு நல்லவராக இருந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். கருணையாய் இருந்து எங்களை பாதுகாத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுடைய கவலைகள், கண்ணீர் யாவையும் நீக்கினதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

இப்பொழுதும், இந்தக் காலை வேளையிலே எங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறோம். உமக்கு புத்தியுள்ள ஆராதனை செய்யும்படியாக எங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுக்கிறோம். எங்களுடைய ஆவி, ஆத்மா, சரீரத்தை நீர் பரிசுத்தப்படுத்துவீராக. எங்கள்மேல் நீர் அசைவாடுவீராக. தண்ணீரின்மேல் அசைவாடின கர்த்தர் இப்பொழுது எங்கள்மேல் நீர் அசைவாடும். எங்களுக்கு அதிகமான அபிஷேகத்தைத் **(Greater Anointing)** தரவேண்டுமென்று ஜெபிக்கிறோம். அடியேனை உம்முடைய வல்ல ஆவியினால் நிரப்புவீராக. உம்முடைய பிள்ளைகளை நீர் ஆவிக்குள்ளாக மாற்றுவீராக. புதிய அபிஷேகத்தை நீர் எங்களுக்குத் தருவீராக. நாங்கள் இந்த இடத்தைவிட்டுச் செல்லும்போது, “கர்த்தர் எங்களோடுகூட பேசினார்” என்று சொல்லத்தக்கதாக, அந்த எம்மாவூர் சீஷர்களைப்போல எங்களுடைய இருதயங்கள் கொழுந்துவிட்டு எரியும்படியாக, இயேசுவை நாங்கள் காணத்தக்கதாக, அவருடைய சத்தத்தை நாங்கள் கேட்கத்தக்கதாக, எங்கள் இருதயத்திலே நாங்கள் உணரத்தக்கதாக நீர் எங்களுக்குக் கிருபை தரவேண்டுமென்று ஜெபிக்கிறோம்.

கர்த்தாவே, நாங்கள் இங்கே வந்திருக்கிறது பாரம்பரியமாக அல்ல, உண்மையான இருதயத்தோடு வந்திருக்கிறோம். உமக்கு ஆராதனை செய்யவேண்டும், உம்முடைய சத்தத்தைக் கேட்கவேண்டும் என்று, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாங்கள் தூரத்திலிருந்தும், சமீபத்திலிருந்தும் வந்திருக்கிறோம். நாங்கள் வந்த நோக்கத்தை நீர் அறிந்திருக்கிறீர். ஒருவராகிலும் வெறுமையாய் திரும்பாதபடி, கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவர்களாய் செல்லத்தக்கதாக இயேசுவே நீர் கிருபை தாரும். உம்முடைய செக்கினா மகிமை **(Shekinah Glory)** எங்கள் மத்தியில் இருக்கட்டும். இந்த இடமுழுவதையும் உம்முடைய ஆவியினால் நிரப்புவீராக. எங்கள் ஒவ்வொருவரையும் ஆவிக்குள்ளாக மாற்றுவீராக. தடையாய் இருக்கிற சகல சத்துருவின் கிரியைகளை அப்புறப்படுத்தும். உம்முடைய வார்த்தையை ஆசீர்வதித்து

அனுப்புவீராக. எங்கள் மத்தியில் நீர் பிரசன்னராய் இருந்து, எங்கள் மத்தியிலே உம்முடைய ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் நீர் கட்டளையிடுவீராக. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## வெளி 8: 1 – 13

1. அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று.

2. பின்பு, தேவனுக்குமுன்பாக நிற்கிற ஏழு தூதர்களையுங் கண்டேன்; அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.

3. வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

4. அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்குமுன்பாக எழும்பிற்று.

5. பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின.

6. அப்பொழுது, ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்.

7. முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும்உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று.

8. இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று.

9. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று.

10. மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுந்தது.

11. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்.

12. நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொரு பங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது; பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.

13. பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்: அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய

எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.

## ஆதியாகமம் 1: 1 - 14

1. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.
2. பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.
3. தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.
4. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்.
5. தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி, முதலாம் நாள் ஆயிற்று.
6. பின்பு தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார்.
7. தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; அது அப்படியே ஆயிற்று.
8. தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று.
9. பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.
10. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.
11. அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.
12. பூமியானது புல்லையும், தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார்.
13. சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.
14. பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்.

## வெளி 8: 1

1. அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று.

சகோ. பிரன்ஹாம் ஏழு எக்காளங்களைக் குறித்து பேசவேண்டுமென்று ஒரு பள்ளியின் அரங்கை ஒழுங்குபண்ணினார்கள். பின்பு சகோ. பிரன்ஹாம் ஜெபிக்கும்போது, “நீ ஏற்கனவே ஆறாம் முத்திரையின் கீழ் ஏழு எக்காளங்களைப் பேசிவிட்டாய்” என்று கர்த்தர் சொல்லிவிட்டார். ஆகையால் அந்த கூட்டத்தை ரத்து செய்துவிட்டார்கள். ஆனால் இப்பொழுது நாம், அவருடைய செய்தியில் இருந்தும், வேதத்தில் இருந்தும் ஏழு எக்காளங்களைக் குறித்துத் தியானிக்கிறோம். சகோ. பிரன்ஹாம் “ஏழு எக்காளங்கள்” என்ற தலைப்பில் செய்திகொடுத்தாரா? இல்லை. ஏழு சபைக்காலங்களைக் கொடுத்திருக்கிறார். ஏழு முத்திரைகளைக் கொடுத்திருக்கிறார். ஏழு எக்காளங்களைக் குறித்தோ, ஏழு கோபகலசங்களைக் குறித்தோ கொடுக்கவில்லை. ஆனாலும் அவருடைய செய்தி நமக்கு இருக்கிறது. வேதம் நமக்கு இருக்கிறது. அபிஷேகம்பண்ணப்பட்டப் போதகர்கள் **(Anointed Preachers)** அபிஷேகத்தின் கீழ் அதை ஒன்றுசேர்க்கிறார்கள். அவ்விதமான செய்தி நம்மத்தியில் கொடுக்கப்படுகிறது.

பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டிற்கு நிழலாட்டமாக இருக்கிறது. இரண்டும் சமம்தான். அது அடையாளங்களாகவும், நிழலாகவும் **(Types & Shadow)** இருக்கிறது. இது உண்மைப் பொருளாக **(Reality)** இருக்கிறது. இந்த பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் இரண்டும் சேர்ந்து வெளிப்படுத்தின விசேஷத்தில் அடங்கியிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தை நாம் படிக்கும்போது, பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் திருப்பிப் பார்க்கவேண்டியதாய் இருக்கிறது. அங்கே என்ன சொல்லியிருக்கிறதோ அதுதான் வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதியிருக்கிறது. எல்லாமே வெளிப்படுத்தின விசேஷத்தில் வந்து முடிவடைகிறது. அது மிக முக்கியமான புத்தகம். அதற்காகத்தான் இதைக்குறித்து நான் அதிகமாகப் பேசுகிறேன். உங்கள் ஆத்துமாவுக்கு இது பிரயோஜனமானது. கர்த்தருடைய வருகைக்கு இது பிரயோஜனமானது. ஆகையால் நீங்கள் கவனமாகக் கேட்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வெளிப்படுத்தல் 8:1 ஏழாம் முத்திரை திறக்கப்படுதல் ஆகும் **(Opening of the Seventh Seal)**. இந்த மேகமானது ஏறக்குறைய அரைமணிநேரம் காணப்பட்டது. அது கர்த்தருடைய வருகையாய் இருக்கிறது **(It is the Coming of the Lord)**. கர்த்தருடைய வருகை என்றால், அது பரிபூரணமான வார்த்தை வந்திருப்பதைக் **(Word Coming)** குறிக்கிறது. அவர் மகிமையின் சரீரத்தில் **(Glorified Body)** இன்னும் வரவில்லை. ஏழு

தூதர்களோடு கிறிஸ்து அங்கே வந்தார். சகோ. பிரன்ஹாமை மேலே எடுத்துக்கொண்டார். “நீ ஜெபர்சன்வில்லுக்குப் போ, ஏழு முத்திரைகளில் அடங்கியிருக்கிற ஏழு இரகசியங்கள் வெளிப்படும்” **(Go to Jeffersonville, the seven mysteries of the Seven Seals will be revealed)** என்று சொன்னார். அவர் அங்கே காத்திருக்கும்போது, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தூதன் வந்து **(Each angel came each day and revealed the mystery)** ஒவ்வொரு முத்திரையாக வெளிப்படுத்தினர். ஏழு முத்திரைகளானது போதிக்கப்பட்டது. அபிஷேகம்பண்ணப்பட்ட வார்த்தை தீர்க்கதரிசியின் வாயின் மூலமாக வந்தது **(The Anointed Word came back through the mouth of the prophet)**. ஏழு முத்திரைகளும் திறக்கப்பட்டது. அல்லேலூயா. ஏழாம் முத்திரை கர்த்தருடைய வருகையாக இருக்கிறது. அது எல்லாவற்றிற்கும் முடிவாக இருக்கிறது **(It is the end of everything)** என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார். கர்த்தருடைய வருகை வந்துவிட்டதா? வந்துவிட்டது என்று சொல்லக்கூடாது. வந்திருக்கிறது என்று சொல்லவேண்டும். நாம் கர்த்தருடைய வருகையில் இருக்கிறோம் **(We are in the Coming of the Lord)**. அது ஆரவாரம், சத்தம், எக்காளமாக **(Shout, Voice, Trump)** இருக்கிறது. அது மூன்று கட்டங்களாக **(Three Stages)** இருக்கிறது.

## I தெசலோனிக்கேயர் 4: 16, 17

16. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

17. பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.

இப்பொழுது நாம் அந்த நடைமுறையில் **(process)** இருக்கிறோம். ஒரு நாள் அவர் மகிமையில் தோன்றும்போது நாம் எல்லாரும் மேலே சென்றுவிடுவோம். அப்பொழுது, கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, அல்லது முடிந்துவிட்டது என்று அர்த்தம். இப்பொழுது அது ஆரம்பித்திருக்கிறது. ஆனாலும் இன்னும் முடிவடையவில்லை **(It started but not yet finished)**. நாம் மேலேசெல்லும்போது அது முடியும். இந்த விளக்கம் உங்களுக்குச் சரியாகத் தெரியவில்லையென்றால் உங்களைப் பலர் வந்து குழப்புவார்கள். விளக்கம் சரியாக உள்ளது. நாம் கர்த்தருடைய வருகையைக்குறித்து **I தெசலோனிக்கேயர் 4: 16, 17, வெளிப்படுத்தல் 10:1**, மற்றும் **I கொரிந்தியர் 15: 51, 52** ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம்.

நம்முடைய சரீரம் இன்னும் மறுரூபமாக்கப்படவில்லை, நாம் இன்னும் இந்த உலகத்தைவிட்டுப் போகவில்லை. நம்முடைய சரீரம் மறுரூபமாக்கப்பட்டு மேலேபோனால், இரண்டாம் வருகை முடிந்துவிடும் **(Second Coming will be finished)**. இப்பொழுது ஆரவாரம், சத்தம், எக்காளமாக இருக்கிறது. ஆரவாரம் **(Shout)** ஒரு கூட்டமான மக்களை வார்த்தையில் கூட்டிச்சேர்க்கிறது. சத்தம் **(Voice)** உயிர்த்தெழுதலின் சத்தமாக **(Voice of Resurrection)** இருக்கிறது, அது நம்முடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. எக்காளம் **(Trump)** உயிர்த்தெழுதலைக் கொண்டுவருகிறது, இங்கே இருக்கிற மணவாட்டியை மறுரூபப்படுத்தி, இரண்டு கூட்டத்தாரும் ஆகாயத்தில் இயேசுவை சந்திப்போம். கடைசி எக்காளம் தொனிக்கும்போது நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். ஏழாவது எக்காளம் நமக்கு எடுத்துக்கொள்ளப்படுதலைக் **(Rapture)** கொண்டுவரும் என்று பரிசுத்த பவுல் நன்றாகச் சொல்லியிருக்கிறார்.

முதல் நான்கு எக்காளங்கள் பூமியோடும், வானத்தோடும் சுற்றுச்சூழலோடும் சம்மந்தப்பட்டது **(First four tumpets deals with the earth, the heaven and the environment)**. அதன்பின்பு, ஐந்தாம், ஆறாம், ஏழாம் எக்காளங்கள், முதலாம் உலக யுத்தம், இரண்டாம் உலக யுத்தம், மூன்றாம் உலக யுத்தமாக இருக்கிறது. மூன்றாம் உலக யுத்தம் சீக்கிரமாக வரும் என்று எல்லாரும் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் கடைசிகாலத்தில் இருக்கிறோம். மூன்றாம் உலக யுத்தம்தான் அர்மகெதோன் யுத்தம் **(Battle of Armageddon)**. ஏழாவது எக்காளம் மூன்றாம் உலக யுத்தமாக இருக்கிறது.

## <u>வெளிப்படுத்தல் 8:13</u>

13. பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்: அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.

ஐயோ, ஐயோ, ஐயோ **(Three Woes)** என்று மூன்றுமுறை எழுதியிருக்கிறது. அதுதான் முதலாம் உலக யுத்தம், இரண்டாம் உலக யுத்தம், மூன்றாம் உலக யுத்தம் **(I, II & III World War)**. கர்த்தர் சித்தமானால் தொடர்ந்து அதைக்குறித்து விளக்கமாகப் பேசுவேன். முதலாம் உலக யுத்தமும், இரண்டாம் உலக யுத்தமும் முடிந்துவிட்டது. இரண்டு ஐயோக்கள் கடந்துபோனது. மூன்றாம் உலக யுத்தம் வரப்போகிறது. வெளிப்படுத்தல் 9ம் அதிகாரத்தில், முதல் 11 வசனங்களில் நாம் முதலாம் ஐயோவைக்குறித்துப் பார்க்கிறோம். அது முதலாம் உலக யுத்தத்தைக் குறிக்கிறது. அதுமாத்திரமல்ல, பாதாளக்குழி திறக்கப்பட்டு, சாத்தானின் ஆவிகளாகிய வெட்டுக்கிளிகள் பூமியில் வருவதையும் பற்றி எழுதியிருக்கிறது. அது இரண்டு விதமாக இருக்கிறது. அது முதலாம் உலக யுத்தத்தை மட்டும் குறிக்காமல், விஞ்ஞானம் என்ற

திறவுகோல் **(Key of Science)** மூலமாக சாத்தானின் ஆவிகள் பூமியின்மேல் வருவதையும் குறிக்கிறது.

## வெளிப்படுத்தல் 9:1-3

1. ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.

2. அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகைஎழும்பிற்று; அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது.

3. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது.

இப்பொழுது, இந்தப் பூமியானது பாதாளமாக **(hell)** இருக்கிறது. பாதாளமானது நிறம்பிவழிந்து பூமிக்குள் வந்துவிட்டது.

அதன்பின்பு நீங்கள் வாசிக்கும்பொழுது, 13ம் வசனத்திலிருந்து 21ம் வசனம் வரைக்கும் இரண்டாம் ஐயோவைக்குறித்துப் பார்க்கிறோம். அது இரண்டாம் உலக யுத்தத்தைக் குறிக்கிறது.

17. குதிரைகளையும் அவைகளின் மேல் ஏறியிருந்தவர்களையும் நான் தரிசனத்தில் கண்டவிதமாவது; அவர்கள் அக்கினிநிறமும் நீலநிறமும் கந்தகநிறமுமான மார்க்கவசங்களையுடையவர்களாயிருந்தார்கள்; குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப்போலிருந்தன; அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும் புறப்பட்டன.

18. அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள்.

அதுமாத்திரமல்ல, அது மதசம்மந்தமான ஆவிகள் **(religious & ecclesiastical spirits)** உலகத்தில் வருவதையும் குறிக்கிறது.

16. குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது; அவைகளின் தொகையைச் சொல்லக்கேட்டேன்.

அந்தக் கள்ள ஆவிகள் உலகத்தில் வந்து அநேகரை வஞ்சித்துக்கொண்டிருக்கிறது.

அதன்பின்பு, வெளிப்படுத்தல் 11ம் அதிகாரம் 15ம் வசனத்திலிருந்து 19ம் வசனம் வரைக்கும் ஏழாம் எக்காளத்தைக் குறித்து வாசிக்கிறோம்.

15. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.

மனுஷனுடைய ராஜ்யம் இந்த உலகத்தில் முடிவடைந்து, தேவனுடைய ராஜ்யம் இந்த உலகத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது. ஆமென். அது ஆயிரவருட அரசாட்சியாக இருக்கிறது. இப்பொழுது நாம் என்ன

ஜெபிக்கவேண்டும்? “இயேசுவே, உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதைப்போல இந்தப் பூமியிலும் செய்யப்படுவதாக” என்று ஜெபிக்கவேண்டும். உலகப்பிரகாரமான அரசியல் கட்சிகளில்போய் சிக்கிக்கொள்ளக்கூடாது. இது தேவனுடைய ராஜ்யம் வரவேண்டிய நேரம். இந்த நேரத்தில் அரசியலில் சிக்கிக்கொள்ளுகிறவர்கள் கைவிடப்பட்டு உபத்திரவகாலத்திலே அணு ஆயுத யுத்தத்தில் சிக்கி, சாம்பலாக மாறுவார்கள். நாம் அவர்களின் சாம்பலின்மேல் நடப்போம் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கடைசிகாலத்தில் ஆத்துமாவை நஷ்டப்படுத்துகிறவர்கள் உண்டா? உண்டு. அந்த யூதாஸ் **(Judas)** கடைசி நேரத்தில் முப்பது வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டுப் பின்வாங்கிப்போனான். தேமா **(Demas)** பிரபஞ்சத்தின்மேல் வாஞ்சை வைத்துப் போய்விட்டான். லோத்தின் மனைவி **(Lot’s wife)** பின்னிட்டுப்பார்த்து உப்புத்தூண் ஆனாள். ஆபிரகாமோடுகூட இருந்த லோத்து **(Lot)** பிரிந்துபோனான். இப்படி சிலபேர் பின்வாங்கிப்போவார்கள். உலகம் அவர்களை வஞ்சிக்கும். கர்த்தருடைய ராஜ்யத்தில் பங்குபெறாமல் போகும்போது, அது பரிதாபமான நிலைமை. தேவனுடைய வார்த்தை விளையாட்டுக்காரியமல்ல. அது உண்மையாக நடக்கப்போகிறது. அல்லேலூயா.

ஏழாம் எக்காளம் எதைக்குறிக்கிறது? அது அர்மகெதோன் **(Armageddon)** யுத்தமாகிய மூன்றாம் உலக யுத்தத்தையும் குறிக்கிறது, ஆயிரவருட ஆளுகையையும் **(Millennium)** குறிக்கிறது. ஒரு எக்காளம் இரண்டு அர்த்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு சம்பவங்களை நாம் பார்க்கிறோம். வெளிப்படுத்தல் 11:18ல் என்ன வாசிக்கிறோம்?

18. ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்.

பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுப்பதற்கு என்று சொல்லும்போது, அதுதான் அர்மகெதோன் யுத்தம்.

19. அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின.

இதெல்லாம நியாயத்தீர்ப்பைக் **(Judgment)** குறிக்கிறது. இப்படி ஏழு எக்காளங்கள் **(7 Trumpets)** எழுதப்பட்டிருக்கிறது. வேதத்தை ஒரு கதையைப்போல **(Story)** படிக்கவேண்டும். முதலில் எழுத்துப் பிரகாரமாகத் **(Literal)** தெரியாமல், ஆவிக்குரியப் பிரகாரமாகப் **(Spiritual)**

பொருத்தமுடியாது. அநேகர் எழுத்தின்படி தெரியாமல் ஆவிக்குரிய விளக்கம்கொடுக்க விரும்புகிறார்கள். வேதத்தை அடிக்கடி படிக்கவேண்டும். அப்பொழுது பிரசங்கத்தைக் கேட்டால் உங்களுக்குச் செய்தி நன்றாகப் புரியும்.

வெளிப்படுத்தல் 8: 7-12 வரை முதல் நான்கு எக்காளங்களை வாசிக்கிறோம். அது பூமிக்கும், ஆகாயத்துக்கும், நாம் வாழுகிற சுற்றுச்சூழலுக்கும் சம்மந்தப்பட்டது **(The environment that man lives in)**. நாம் உலகத்தில் வாழவேண்டுமென்றால் நல்ல சுற்றுச்சூழல் தேவை. நான் ஊழியம் செய்யவேண்டுமென்றால் இங்கே நல்ல சூழ்நிலை வேண்டும். விவாகமான ஒரு பெண், கணவன் வீட்டில் வாழவேண்டுமென்றால், கணவன் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டும். பிள்ளைகள் நன்றாக வாழுவதற்கு, நாம் ஒரு ஆவிக்குரிய சூழ்நிலையைக் குடும்பத்தில் ஏற்படுத்தவேண்டும். நான் இங்கே ஒரு ஆவிக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தினால்தான் நீங்கள் இங்கே வந்து ஆராதிக்கமுடியும். சுற்றுச்சூழல் சரியாக இருந்தால்தான் நாம் வாழமுடியும். ஆகையால் சுற்றுச்சூழல் மிகமுக்கியமானது. இதெல்லாம் எங்கே நாம் பார்க்கிறோம்? ஆதியாகமத்திற்கு நாம் போகவேண்டும் **(We go back to Genesis)**. இந்த வெளிப்படுத்தின விசேஷம் நம்மை ஆதியாகமத்திற்குக் கொண்டுசெல்லுகிறது. அதற்காகத்தான் இரண்டு பாகத்தை நான் வாசித்திருக்கிறேன். இந்தச் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை நாம் கவனிக்கும்பொழுது, ஆதியிலே ஆண்டவர் எப்படி உண்டாக்கினார் என்று, நாம் அங்கேபோய்ப் பார்க்கவேண்டும். இன்றைக்கு அதைத்தான் பார்க்கப்போகிறோம்.

## ஆதியாகமம் 1:1

1. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

## ஆதியாகமம் 1:11

11. அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.

கர்த்தர் முதலாம் நாளில் வெளிச்சத்தை உண்டாக்கினார். இரண்டாம் நாளில் பூமியையும் சமுத்திரத்தையும் வெவ்வேறாகப் பிரித்தார். மூன்றாம் நாளில் தாவர வர்க்கங்களையும் **(Botany Life)**, கனிதரும் மரங்களையும் உண்டாக்கினார். அதன்பின்பு, நாலாம் நாளில் சூரிய, சந்திர நட்சத்திரங்களை உண்டாக்கினார். ஐந்தாம் நாளில், மச்சங்களையும் பறவைகளையும் **(Marine Life)** உண்டாக்கினார். ஆறாம் நாளில், காட்டு மிருகங்களையும், நாட்டு மிருகங்களையும் **(Animal Life)** உண்டாக்கி, கடைசியாக மனுஷனை உண்டாக்கினார். இப்படியாக ஆறு நாட்களில்

எல்லாவற்றையும் சிருஷ்டித்து, ஆண்டவர் அங்கே பார்க்கும்போது, எல்லாமே மிக நன்றாக இருந்தது. அவர் மிகவும் திருப்தியடைந்ததினால் ஓய்வெடுக்கச் **(Rest)** சென்றுவிட்டார். ஏழாம் நாளில் அவர் ஓய்ந்திருந்தார். அப்பொழுது அங்கே நல்ல சுற்றுச்சூழல் இருந்தது. எல்லாமே மிகவும் நன்றாக இருந்தது. ஒவ்வொரு சிருஷ்டிகளும் ஒன்றோடு ஒன்று இசைவாக மிக அருமையான சூழலில் இருந்தன **(Everything was in harmony with each other)**. ஆண்டவர் இந்த உலகத்தை அவ்விதமாக உண்டாக்கி வைத்திருந்தார். ஆனால் மனுஷன் இன்றைக்கு எல்லாவற்றையும் கெடுத்துப்போட்டுவிட்டான். மனுஷன் அதைக் கெடுத்ததைத்தான் முதல் நாலு எக்காளங்களில் நாம் வாசிக்கிறோம்.

முதலாவது அவன் பூமியைக் கெடுத்தான். இரண்டாவது அவன் சமுத்திரத்தைக் கெடுத்தான். மூன்றாவது நீரூற்றுகளையும், சுத்தமான தண்ணீரையும் கெடுத்தான். பின்பு சூரியன், சந்திரன், நட்சத்திரங்களையும் கெடுத்துப்போட்டான். ஆண்டவர் எல்லாவற்றையும் சரியாகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார். இந்த கெட்டுப்போன உலகத்தை நாம் பார்க்கும்பொழுது, ஆண்டவர் இதை இப்படி வைத்திருந்தாரா என்று ஆதியாகமத்திற்குப்போய் நாம் பார்க்கவேண்டும். இப்படி அதிகமான வெயில் அடிக்கும்படியாக வைத்திருந்தாரா? இல்லை. உலகமே குளிர்சாதன வசதி **(Air Condition)** செய்த்ததுபோல வைத்திருந்தார். அவர் எல்லாவற்றையும் நன்றாக உண்டாக்கி, மனுஷன் இந்தப் பூமியில் சந்தோஷமாக வாழுவதற்கும், ஆண்டவர் மனுஷனோடு தொடர்புகொள்வதற்கும் ஏற்றதாக வைத்திருந்தார். பரலோகமும் பூலோகமும் ஒன்றாய் இணைந்திருந்தது **(Heaven and Earth met together)**. இப்பொழுது, நாம் அனுகமுடியாத தூரத்தில் பரலோகம் இருக்கிறது. அப்பொழுது, நல்ல சுற்றுச்சூழல் இருந்தது. ஆண்டவர் வந்து அவர்களோடு பேசினார். ஆனால் மனுஷன் எல்லாவற்றையும் சீர்க்குலைதுப்போட்டான். இன்றைக்கு எல்லாமே தாறுமாறாகவும், மாசுபட்டதாகவும் **(Polluted)** இருக்கிறபடியால், மனுஷன் வாழமுடியாத சூழ்நிலை இருக்கிறது. பறவைகள், மிருகங்கள் வாழமுடியாத சூழ்நிலை இருக்கிறது. **"பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுப்பதற்குக் காலம் வந்தது"**

11ம் வசனத்தில் என்ன வாசிக்கிறோம்? பூமியானது புல்லையும் **(Grass)**, பூண்டுகளையும் **(Herb)**, கனிவிருட்சங்களையும் **(Trees yielding fruit)** தங்கள் தங்கள் ஜாதியின்படியே முளைப்பிக்கக்கடவது என்றார். ஆண்டவர் வார்த்தையை உரைத்தார். வார்த்தையானது வித்தாக இருக்கிறது **(Word is the Seed)**. அந்த வித்தானது தன்னிலுள்ளதைக் கொண்டுவந்தது **(Manifestation)**. புல்லை யார் உண்டாக்கியது? கர்த்தர் உண்டாக்கினார். மிருகங்கள் இன்னும் வரவில்லை. ஆனால் மிருகங்கள் வரப்போகிறதென்று ஆண்டவருக்குத் தெரியும். அவைகளுக்கு ஆகாரம்

வேண்டுமென்று மிருகங்கள் வருவதற்கு முன்பே புல்லை உண்டாக்கினார். ஆண்டவருடைய ஞானத்தைப் பாருங்கள். மனுஷனுடைய ஞானத்தைக் காட்டிலும் தேவனுடைய ஞானம் மகா பெரியது. அல்லேலூயா. நாம் எவ்வளவு படித்தாலும் நம்முடைய ஞானம் குறைவுள்ளது. வித்தியாசமான மிருகங்கள் **(different kinds of animals)** வரப்போகிறதென்பதை தேவன் அறிந்திருந்தார். அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான புல்லை சாப்பிடும். ஆகையால் தேவன் வித்தியாசமான புல்லை **(different kinds of grass)** முளைக்கப்பண்ணினார். தேவனுடைய சிந்தையில் மறைந்திருந்த அந்த இரகசியமானது **(The great mystery in the back part of God's mind)**, இப்பொழுது வார்த்தையை உரைக்கும்போது அது வெளிப்படுகிறது. ஆமென்.

அதன்பின்பு தேவன் நீர்வாழ் ஜந்துக்களைக் **(Marine Life)** கொண்டுவருகிறார். சமுத்திரமானது மீன்களை உண்டாக்கக்கடவது என்று சொல்லுகிறார். அதன்பின்பு அவர் மிருக ஜீவன்களை **(Animal Life)** உண்டாக்கினார். இப்படி எல்லாவற்றையும் உண்டாக்கவேண்டும் என்று தேவன் தமக்குள்ளே தீர்மானித்திருந்தார். ஆனால் அது அவருடைய சிந்தையில்தான் இருக்கிறது. அது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் தம்முடைய சிந்தையில் இருந்ததை அவர் வார்த்தையாக உரைக்கும்போது அது வெளிப்பட்டது. அதைப்போல, நாம் மனதில் வைத்திருந்தால்மட்டும் போதாது. அதை வாயைத் திறந்து ஆண்டவரிடம் சொல்லவேண்டும். உங்கள் விசுவாசத்தை நீங்கள் அறிக்கைபண்ணவேண்டும் **(Confess your Faith)**. உலகம் எப்படி வந்தது? விசுவாசத்தினாலே ஆண்டவர் உலகத்தை உண்டாக்கினார். அவர் வார்த்தையை உரைத்தால் அது வெளிப்படும் என்று அவருக்குத் தெரியும். அதுதான் தேவனுடைய விசுவாசம் **(God's Faith)**. அந்த விசுவாசம்தான் நமக்குத் தேவை. நீங்கள் விசுவாசத்தை அறிக்கைபண்ணினால், தேவன் உங்கள் அறிக்கையின்படி செயல்படுகிற பிரதான ஆசாரியராய் இருக்கிறார். அல்லேலூயா.

அவர் தமக்குள்ளே தீர்மானித்திருந்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

## எபேசியர் 1: 10

10. தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்.

தமக்குள்ளே தீர்மானித்திருந்த இரகசியத்தை ஆண்டவர் இந்தக் கடைசிகாலத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அல்லேலூயா. அவருக்குமட்டும்தான் தெரியும், வேறே யாருக்கும் தெரியாது. இரகசியம் இருதயத்தில் இருக்கிறது. அவருடைய சிந்தைக்குள் மறைந்திருக்கிறது. அதை உரைக்கும்போது அது வெளிப்பட்டது. அவர் தமக்குள்ளே தீர்மானித்திருந்தார். ஸ்தாபன மக்கள் என்ன சொல்லுகிறார்கள்? பிதா

இருக்கிறார், குமாரன் இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். பிதா வயதானவராக, நரைத்துப்போன முடியும், நரைத்துப்போன தாடியும் வைத்திருக்கிறார், குமாரன் இயேசுகிறிஸ்து இளமையாக இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் ஒரு வேலைக்காரன்போல இருக்கிறார். இந்த மூன்றுபேரும் திட்டம்பண்ணினார்கள். மனுஷன் விழுந்துபோனான். எப்படி மனுஷனை மீட்பது என்று திட்டம்பண்ணினார்கள். ஆகையால், பிதா குமாரனைப் பார்த்து "நீர் போய் ஜனங்களுக்காக மரிக்கவேண்டும். சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து, அதன்பின்பு நீர் வந்துவிடும். பின்பு பரிசுத்த ஆவியானவர் போய் அவர்களை ஆயத்தப்படுத்துவார்" என்பதுதான் ஸ்தாபன உபதேசம். இது வார்த்தைக்கு எவ்வளவு விரோதமாக இருக்கிறது! இது அஞ்ஞானக் கட்டுக்கதையாக இருக்கிறது. இது அவர்களுடைய சொந்த கற்பனையாக **(own imagination)** இருக்கிறது. இது தேவனுடைய சிந்தை அல்ல. அல்லேலூயா. அவர் தமக்குள்ளே தீர்மானித்திருந்தார் என்று எழுதியிருக்கும்பொழுது, மூன்றுபேரும் உட்கார்ந்து யோசித்தார்கள்" என்று சொல்லுவது எவ்வளவு தவறானது! அவருக்குள்தான், அவர்மட்டும்தான் அங்கே இருக்கிறார். எத்தனைப்பேர் ஒரே தேவனை **(One God)** விசுவாசிக்கிறோம்? நாம் திரித்துவத்தை விசுவாசிக்கவில்லை. மூன்று கடவுளை நம்பவில்லை. அது மனுஷனுடைய சொந்தக் கோட்பாடாக **(Man's own dogma and creed)** இருக்கிறது. நாம் வார்த்தையை விசுவாசிக்கிறோம் **(We believe the Word)**. அல்லேலூயா.

அவர் தமக்குள்ளே தீர்மானித்து, அவருடைய சந்தோஷத்திற்காக உண்டாக்கினார் **(according to His good pleasure which He has purposed in Himslef)**. அவர் தம்முடைய சொந்த விருப்பத்திற்காக, தம்முடைய சொந்த சந்தோஷத்திற்காக உங்களை உண்டாக்கினார். அல்லேலூயா. எத்தனைப்பேர் கர்த்தரை நாம் பிரியப்படுத்துகிறோம்? நாம் அவரை சந்தோஷப்படுத்தவேண்டும். போதகருக்கே **(Pastor)** உங்கள்மேல் திருப்தியில்லை என்றால் கர்த்தரை எப்படி சந்தோஷப்படுத்தமுடியும்? போதகர் பார்ப்பதைவிட ஆண்டவர் மிகவும் கூர்மையாக பார்க்கிறார். நாம் எல்லாரும் ஒருவரை ஒருவர் சந்தோஷப்படுத்தகிறவர்களாக இருக்கவேண்டும். என்ன சந்தோஷம்? உலகப் பிரகாரமான சந்தோஷமா? பாவ சந்தோஷமா? இதோ, ஆவியிலே களிகூரவேண்டும். அல்லேலூயா. ஒவ்வொருவரும் மற்றவர் பக்திவிருத்தியடைவதற்கு ஏதுவாக இருக்கவேண்டும். நாம் தேவனைப் பிரியப்படுத்தவேண்டும். அல்லேலூயா. விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்.

முதலாவது, அது தேவனுடைய சிந்தனையில் இருந்தது. இரண்டாவது, அவர் வார்த்தையை உரைத்தார். மூன்றாவது, அது

காட்சியிலே வந்தது. ஆண்டவர் எல்லாவற்றையும் பார்க்கிறார். வேதத்தில் என்ன வாசிக்கிறோம்? ஆண்டவர் தாம் உண்டாகினதைப் பார்க்கும்பொழுது அது நல்லது **(It was good)** என்று கண்டார். ஆறு முறை வாசிக்கிறோம். அதைப் பார்க்கும்பொழுது அவருக்கே ஒரு சந்தோஷம் ஏற்பட்டுவிட்டது. இந்த பூமி எவ்வளவு அழகாக இருக்கிறது! சமுத்திரம் எவ்வளவு அழகாக இருக்கிறது! சமுத்திரம் பூமியைச் சுற்றி இருந்தது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப் பார்க்கிறார், எல்லாமே அழகாக இருந்தது! ஆண்டவர் சூரியனுக்கு ஒரு ஸ்தானத்தையும், சந்திரனுக்கு ஒரு ஸ்தானத்தையும், நட்சத்திரங்களுக்கு ஒரு ஸ்தானத்தையும் கொடுத்திருக்கிறார். எல்லாமே அதினதின் ஸ்தானத்திலே அழகாக இருந்தது. பின்பு சமுத்திரத்திலே மீன்களைக் கொண்டுவருகிறார். அது எல்லாமே அழகாக இருந்தது. அதன்பின்பு, காட்டு மிருகங்களையும், நாட்டு மிருகங்களையும் உண்டாக்கி, கடைசியாக மனுஷனை உண்டாக்கும்போது **மிகவும் நன்றாயிருந்தது** என்று சொன்னார்.

## ஆதியாகமம் 1:31

31. அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.

எல்லாவற்றையும் உண்டாக்கினபின்பு அது நல்லது, அது நல்லது **(It was good)** என்று சொன்னவர், கடைசியாக மனுஷனை உண்டாக்கினபின்பு, அது மிகவும் நன்றாயிருந்தது **(It was very good)** என்று சொன்னார். ஆண்டவர் அதில் பிரியப்பட்டார். நாம் ஒரு தோட்டத்தை உண்டாக்கி செடிகளை வைத்து, அதைப் போய் பார்க்கிறோம். “பூக்கள் எவ்வளவு அழகாகப் பூத்திருக்கிறது” என்று நாம் பார்க்கும்போது, நமக்கு அதில் ஒரு சந்தோஷம். அதைப்போல, தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கிய பின்பு அதைப் பார்த்து, அது மிகவும் நன்றாக இருந்தது என்று சொன்னார். அவர் சந்தோஷப்பட்டார்.

பிரசங்கத்தை நன்றாக கவனியுங்கள். எப்படி ஏழு எக்காளங்கள் இங்கே வருகிறதென்று பாருங்கள். ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில், ஆண்டவரை **“தேவன்”**, **“தேவன்”** **(God)** என்று எழுதியிருக்கிறது. ஆதியாகமம் 2: 4 வசனத்திலே **“தேவனாகிய கர்த்தர்”** **(The Lord God)** என்று எழுதியிருக்கிறது.

## ஆதியாகமம் 2: 3, 4

3. தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

4. தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே.

3ம் வசனம் வரைக்கும் “தேவன்” என்றுதான் எழுதியிருக்கிறது. ஆனால், 4ம் வசனம் வரும்போது “தேவனாகிய கர்த்தர்” என்று எழுதியிருக்கிறது. அவர் எல்லாவற்றையும் உண்டாக்கின பின்பு, கடைசியாக ஆதாமை அங்கே கொண்டுவரும்பொழுது, தம்முடைய குமாரனை அவர் கொண்டுவரும்பொழுது, அதிலிருந்து அவர் என்ன சொல்லுகிறார் என்றால், அந்த இரண்டாம் அதிகாரத்தில் 25 வசனங்கள் இருக்கிறது, அதை நான் வாசிக்கும்பொழுது, 4ம் வசனத்தில் இருந்து ஒன்பது இடங்களில் “**தேவனாகிய கர்த்தர்**” என்று எழுதியிருக்கிறது. ஏன் அப்படி எழுதியிருக்கிறது? இப்பொழுது அவருடைய குடும்பம் **(Family)** அங்கே வந்துவிட்டது. அல்லேலூயா. இது வரைக்கும் “**ஏலோகிம்**” ஆக **(Elohim)** இருந்தார். நித்திய ஆவியாக இருந்த தேவன், கிறிஸ்துவாக **(Christ)**, ஆவிக்குரிய சரீரமாக **(Theophany)**, வார்த்தையாக **(Word)** மாறினார். அந்த ஆவிக்குரிய சரீரத்தில் இருந்துதான் எல்லாவற்றையும் உண்டாக்கினார் **(Christ created everything)**. அதனால் அவர் தேவன் என்று அழைக்கப்பட்டார். இப்பொழுது அவருக்கு ஒரு குடும்பம் வந்துவிட்டது. அங்கே ஒரு உயிரின வாழ்க்கைச் சூழலை **(Ecology)** உண்டாக்குகிறார். தாவரங்கள், நீர் வாழ் ஜந்துக்கள், பறவைகள் மற்றும் மிருக ஜீவன்களை உண்டாக்குகிறார். கடைசியாக அவருடைய குமாரன் ஆதாம் வரும்போது அவர் யேகோவா தேவன் **(Jehovah)** என்று அழைக்கப்படுகிறார்.

தேவனாகிய கர்த்தர் **(The Lord God)** என்றால் தேவன் தம்முடைய குடும்பத்தோடு இருப்பது **(God with His Family)**. அல்லேலூயா. ஆண்டவருக்கு என்ன விருப்பம்? தம்முடைய குடும்பத்தோடு வாசம்பண்ணவேண்டும். அல்லேலூயா. தனியாகவே இருந்தவர், இப்போது குடும்பத்தோடு வாசம்பண்ண விரும்புகிறார். அவருக்குத் தனியாக இருக்க விருப்பம் இல்லை. அல்லேலூயா. எத்தனைப் பேர் நாம் ஐக்கியத்தை **(fellowship)** விரும்புகிறோம்? இப்பொழுது நாம் எதற்காக வந்திருக்கிறோம்? தேவனோடும், அவருடைய பிள்ளைகளோடும் ஐக்கியப்பட வந்திருக்கிறோம். அல்லேலூயா. நாம் ஐக்கியத்தை விரும்புகிறோம். தேவனுடைய பிள்ளைகளாக ஐக்கியப்பட விரும்புகிறோம். தேவனுடைய வார்த்தையைச் சுற்றிலும் ஐக்கியப்பட விரும்புகிறோம் **(Fellowship around the Word of God)**. தேவனுடைய விருப்பமும் அதுதான். ஏலோகிமாக இருந்தவர் யேகோவாவாக மாறினார் **(From Elohim to Jehovah)**. அந்த ஸ்தானத்துக்கு அவர் வந்தார்.

வெளிப்படுத்தல் 8: 1-5 வசனங்களில் ஒரு பின்னணியை **(background)** வாசிக்கிறோம். ஏழு எக்காளங்கள் ஊதப்படுவதற்கு முன்னதாக, ஒரு பின்னணி அங்கே வருகிறது. அந்த தூதனைக்குறித்தும், அவன் என்ன செய்கிறான் என்பதையும் வாசிக்கிறோம். 6ம் வசனத்திலே,

அந்த ஏழு தூதர்களும், எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டார்கள். அதன்பின்பு என்ன வாசிக்கிறோம்?

## வெளிப்படுத்தல் 8: 7-9

7. முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று.

8. இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று.

9. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று.

இந்த வசனங்களில் முதல் இரண்டு எக்காளங்களைக் குறித்து வாசிக்கிறோம். பூமியும் சமுத்திரமும் எவ்விதமாகக் கெட்டுப்போனது என்று பார்க்கிறோம். முதலாம் எக்காளம் பூமியோடு சம்மந்தப்பட்டது. மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று. இந்த எக்காளங்கள் எல்லாமே “மூன்றிலொருபங்கு”, “மூன்றிலொருபங்கு” என்றுதான் இருக்கும். மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று, ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று, கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று **(third part of the trees, third part of the sea, third part of the creatures, third part of the ships)** என்று எழுதியிருக்கிறது. ஆனால் கோபகலசங்கள் வரும்போது, அது முற்றிலுமான அழிவாக **(Total annihilation)** இருக்கும். இப்பொழுது உலகத்தில் மூன்றிலொருபங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. கோபகலசங்கள் ஊற்றப்படும்போது உலகம் முற்றிலுமாக அழிந்துபோகும்.

முதலாம் தூதன் எக்காளம் ஊதும்போது, இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி பூமியிலே கொட்டப்பட்டது. அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று. ஆதியாகமம் 1ம் அதிகாரத்தில் எப்படி இருக்கிறது? அந்தந்த கனிகளைக் கொடுக்கும் கனிவிருட்சங்கள் அங்கே இருந்தது. புல்லெல்லாம் பசுமையாக இருந்தது. எல்லாவிதமான செடிகளும் அங்கே இருந்தது. அது எவ்வளவு அழகாக இருந்தது! ஆனால் மனுஷன் இப்பொழுது எப்படி மாற்றிவிட்டான்?

சென்னையிலே வெள்ளம் வந்ததற்கு இப்பொழுது எதாவது அறிகுறி இருக்கிறதா? ஒரே தூசிதான் இருக்கிறது. அவ்வளவு வெயில், அவ்வளவு வறட்சி. ஆனால் ஆண்டவர் உண்டாக்கும்போது எப்படி இருந்தது? எல்லாம் பசுமையாக இருந்தது, மாசில்லாமல் **(No pollution)** இருந்தது. மிருகங்களெல்லாம் எவ்விதமாகப் புல்லை மேய்ந்தது! எவ்வளவு

அருமையான காட்சி அது. அந்தக் காட்சியை மனுஷன் எப்படி கெடுத்துவிட்டான் என்று பாருங்கள். அதற்குத்தான் எக்காளங்களை நாம் படிக்கவேண்டும்.

இரண்டாம் தூதன் எக்காளம் ஊதும்போது, சமுத்திரம் கெட்டுப்போகிறதை நாம் பார்க்கிறோம். மூன்றிலொருபங்கு கெட்டுப்போகிறது. ஆனால் கர்த்தர் சமுத்திரத்தை எவ்வளவு அழகாக உண்டாக்கினார்! இயேசுகிறிஸ்து சமுத்திரத்தின்மேல் நடந்தார் **(Jesus could walk on the water)**. அல்லேலூயா. ஆதாம் நடக்கமுடியுமா? ஆதாம் நடக்கமுடியும். இயேசுகிறிஸ்து இரண்டாம் ஆதாமாக வந்திருக்கிறார். தண்ணீரின்மேல் நடக்கமுடியுமா? நடக்கமுடியும். இயேசுகிறிஸ்து தண்ணீரின்மேல் நடந்தார். அது எதைக்குறிக்கிறது? அந்தச் சமுத்திரத்தை உண்டாக்கினது அவர்தான். அல்லேலூயா. அவர்தான் எஜமானர் **(Master)**. அவர்தான் சிருஷ்டிகர் **(Creator)**. அதனால், அவர் தண்ணீரின்மேல் நடக்கமுடியும். மனுஷன் நடக்கமுடியாது. **மத்தேயு 14:25**ல் என்ன வாசிக்கிறோம்.

25. இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

இதோ, கடலின்மேல் நடந்து வந்தார். எனென்றால் சமுத்திரத்தை அவர் உண்டாக்கினார். சமுத்திரம் அவரை அமிழ்த்தாது.

லூக்கா 5ம் அதிகாரத்தில் முதல் சில வசனங்களை நாம் வாசிக்கும்பொழுது, அங்கே சீமோன் பேதுருவும், அந்திரேயாவும், யாக்கோபும், யோவானும் கலிலேயா கடலில் மீன்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இராத்திரி முழுதும் பிரயாசப்பட்டு ஒரு மீன்கூட கிடைக்கவில்லை. கர்த்தர் அவர்கள் படகை கேட்டுவாங்கி, அந்த படகில் நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணுகிறார். போதகம்பண்ணி முடித்த பின்பு, ஆண்டவர் சீமோனைப் பார்த்து என்ன சொல்லுகிறார்? வலையைக்கொண்டுபோய் ஆழத்திலே போடு **(Launch out into the deep)** என்றார். ஆழத்திலேபோடும்போது திரளான மீன்கள் கிடைத்தது. வலை கிழிந்துபோகத்தக்கதாக மீன்கள் கிடைத்தது. பக்கத்திலிருக்கிற படகுகளையும் அவர்கள் உதவிக்குக் கேட்டுக்கொண்டு, அந்தத் திரளான மீன்களைக் கொண்டுவந்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். பேதுரு என்ன சொல்லுகிறான்?

**லூக்கா 5: 5**

5. அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்.

இராத்திரிமுழுதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனாலும், "உம்முடைய வார்த்தையின்படியே வலையைப்போடுகிறேன்" என்று

சொன்னான் **(Nevertheless at thy word I will let down the net)**. அப்பொழுது நிறைய மீன்கள் கிடைத்தது. அல்லேலூயா. அவர்களுடைய அப்பா ஒரு மீன்பிடிக்கிறவர் **(fisherman)**. அவர்களுடைய தாத்தாவும் மீன்பிடிக்கிறவர். மீன்பிடிக்கிற அந்த குப்பத்தில்தான் வாசம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய பரம்பரைத் தொழில் மீன்பிடிப்பது. இராத்திரியெல்லாம் மீன்பிடிப்பார்கள். இப்படி வாழ்ந்தவர்களுக்கு, ஒரு தச்சர் **(Carpenter)** வந்து சொல்லுகிறார். இவர் முப்பது வருஷமாய் தச்சுத் தொழில் செய்திருக்கிறார். “இந்த தச்சருக்குக் கடலைப்பற்றி என்ன தெரியும்? மீனைப்பற்றி என்ன தெரியும்? எங்களுக்கு எவ்வளவோ அனுபவம் இருக்கிறது. ஆனால் எங்கள் அனுபவத்தின்படி ஒரு மீனும் கிடைக்கவில்லை. இந்த தச்சருக்கு என்ன தெரியும்” என்று அவன் நினைத்திருக்கக்கூடும். அதன்பின்பு, அவன் பிரசங்கத்தை ஏற்கனவே கேட்டதினாலே, அந்த மாம்சமான திரைக்குள்ளே கர்த்தர் இருக்கிறார், தேவன் அவருக்குள் வாசம்பண்ணுகிறார், அது தேவனுடைய சத்தம் என்று அவன் விசுவாசித்தான். அது ஒரு தச்சரின் சத்தமல்ல, அது தேவனுடைய சத்தம். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கும்போது, “வெளிச்சம் உண்டாகக்கடவது” என்று சொன்னார். “மீன்கள் உண்டாகக்கடவது” என்று சொன்னார். அது அந்த சத்தம் என்று அவன் அறிந்துகொண்டான். அல்லேலூயா.

இப்பொழுது, அவன் தன்னுடைய அனுபவங்களையெல்லாம் மறுதலித்து, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான் **(submissive to the Word of God)**. அல்லேலூயா. அதைப்போல, நமக்கு நிறைய அனுபவங்கள் இருக்கலாம், நிறைய அறிவு இருக்கலாம், அதையெல்லாம் நாம் விட்டு விட்டு, தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதை விசுவாசிக்க வேண்டும். உங்களுடைய சொந்த கருத்துக்கள் எல்லாம் கர்த்தருக்கு முன்பாக செல்லுபடியாகாது. அதையெல்லாம் நீங்கள் ஒதுக்கிவைத்துவிட்டு, கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதற்குக் கீழ்ப்படிந்தால்தான் நமக்கு ஆசீர்வாதம் வரும். ஆமென்.

பேதுரு வலையைப்போடும்போது திரளான மீன்கள் கிடைத்தது. ஆனால், இங்கே என்ன வாசிக்கிறோம். சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு மீன்கள் செத்துப்போயிற்று. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; ஆதியிலே எப்படி இருந்தது? எல்லா மீன்களும் அங்கே இருந்தது. கலிலேயா கடல் ஒரு நல்ல மீன்பிடிக்கும் இடமாக இருந்தது. அன்றைக்குக் கடலில் திமிங்கலம் **(Whale)**, சுறா மீன் **(Shark)**, டால்பின் **(Dolphins)**, கடற்குதிரை **(Walrus)** போன்ற சின்ன மீன்கள், பெரிய மீன்கள் எல்லாம் சமுத்திரத்தில் நிறைய இருக்கிறது. ஆண்டவர் உண்டாக்கும்போது அவைகள் எப்படி இருந்திருக்கும் என்று பாருங்கள்! இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வரும்போதுகூட நன்றாகத்தான் இருந்தது.

ஆனால், இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு, இப்பொழுது, சமுத்திரம் எப்படி கெட்டுப்போயிருக்கிறது என்று பாருங்கள். மூன்றிலொருபங்கு மீன்கள் மரித்துப்போனது. ஆதியாகமத்தில் அது எப்படி இருந்தது, ஆனால் மனுஷன் இப்பொழுது அதை எப்படிக் கெடுத்துவிட்டான் என்று பாருங்கள்.

அதன்பின்பு மூன்றாம் எக்காளத்தில் என்ன வாசிக்கிறோம்?

**வெளிப்படுத்தல் 8: 10, 11**

10. மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுந்தது.

11. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்.

இரண்டாம் எக்காளத்தில் உப்புத் தண்ணீர் **(Salt water)** கெட்டுப்போனது. இப்பொழுது, நல்லத் தண்ணீர் **(Fresh water)** கெட்டுப்போயிற்று. உப்புத் தண்ணீரில் வாழும் சில மீன்கள் நல்லத் தண்ணீரில் வாழாது. அதைபோல, நல்லத் தண்ணீரில் வாழும் மீன்கள் உப்புத் தண்ணீரில் வாழாது. மனுஷன் குடிப்பதற்கு நல்லத் தண்ணீர்தான் தேவை. மிருகங்களுக்கும் நல்லத் தண்ணீர்தான் தேவை. கடல் தண்ணீரைக் குடிக்கமுடியாது. மரம், செடி வளர்வதற்கு நல்லத் தண்ணீர் தேவை. சமயலுக்கும் நல்லத் தண்ணீர்தான் தேவை. துணிகளைத் துவைப்பதற்கும் நல்லத் தண்ணீர்தான் தேவை. ஆண்டவர் மனுஷனை உண்டாக்குவதற்கு முன்னதாகவே, இவனுக்கு நல்லத் தண்ணீர் தேவை என்று சொல்லி, நீரூற்றுகளை உண்டாக்கினார். அவர் ஆறுகளை உண்டாக்கினார். ஆனால் மனுஷன் அவைகளை எப்படிக் கெடுத்துவிட்டான்!

மூன்றாவது எக்காளம் ஊதும்போது, ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் மூன்றிலொருபங்கு சேதப்பட்டது **(third part of the rivers, and fountains were smitten)**. ஆறுகள், ஏரிகள், நீரூற்றுகள் ஆகிய எல்லாமே இன்றைக்குக் கெட்டுப்போனது. கர்த்தர் ஏதேனை உண்டாக்கும்போது, ஆறுகளை அவர் உண்டாக்கினார். எவ்வளவு பகுதி வாயு **(Gas)** சேர்ந்தால் தண்ணீர் உண்டாகும் என்று ஆண்டவருக்குத் தெரியும். மனுஷன் இன்றைக்கு அதைக் கண்டுபிடிக்கிறான். நீரகம் **(Hydrogen)** இரண்டு பங்கும், பிராணவாயு என்று சொல்லப்படுகிற உயிரகம் **(Oxygen)** ஒரு பங்கும் சேர்ந்தால் தண்ணீர் **($H_2O$)** உண்டாகிறது. ஆண்டவர் அவ்விதமாக சுத்தமான தண்ணீரை சிருஷ்டித்தார். ஆனால் இன்றைக்குத் தண்ணீர் எவ்விதமாக இருக்கிறது? அது மஞ்சள் நிறமாக **(yellow water)** இருக்கிறது. அது மாசுபட்டிருக்கிறது. ஏதேனில் ஒரு ஆறு ஓடுகிறது. அது சுத்தமான தண்ணீர். மிருகங்கள் அங்கேபோய் தண்ணீர் குடிக்கிறது. ஆதாம் அந்தத்

தண்ணீரைக் குடிக்கும்போது, அது பளிங்கைப்போல் சுத்தமான **(Crystal Clear & pure)** தண்ணீராக இருந்தது. அங்கே ஒரு ஆறு புறப்படுகிறது.

**ஆதியாகமம் 2: 10**

10. தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று.

ஏதேனைச் செழிப்பாக்குவதற்காக ஆண்டவர் ஒரு நதியை உண்டாக்கினார். அது பைசோன், கீகோன், இதெக்கேல் மற்றும் ஐபிராத்து என்ற நாலு பிரிவாகப் பிரிந்து ஏதேனைச் செழிப்பாக்கினது. இவ்விதமாக ஆண்டவர் நதிகளை உண்டாக்கினார். கெட்டத் தண்ணீரே இல்லை. ஆனால் மனுஷன் நீரூற்றுகளைக் கெடுத்ததால், தண்ணீரில் இரும்புத் துகள் கலந்து வருகிறது, உப்பாக இருக்கிறது, நம்மால் குடிக்கமுடியவில்லை. இதோ, சுற்றுச் சூழலை அவன் மாசுபடுத்திவிட்டான்.

ஆதாம் வரப்போகிறான் என்று ஆண்டவருக்குத் தெரியும். அவனுக்கு நல்லத் தண்ணீர் தேவை. அவனுக்கு வெளிச்சம் கொடுப்பதற்குச் சூரியன் தேவை. சந்திரன், நட்சத்திரங்கள் தேவை. ஆகையால் நாலாம் நாள் அவர் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.

**ஆதியாகமம் 1: 14**

14. பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்.

இதோ, சூரியன் வருகிறது. ஆண்டவர் அதை பூமிக்கு அருகில் வராதபடி நிறுத்துகிறார். சூரியனுக்கும் பூமிக்கும் இடையே 9 கோடியே 30 லட்சம் **(93 million miles)** மைல் தூரம் இருக்கிறது. அது அதற்குமேல் வந்தால் தன்னுடைய பிள்ளைகள் அங்கே வாழமுடியாது, உஷ்ணம் அதிகமாகிவிடும். ஆகையால் தேவன் அதை தூரத்திலே வைக்கிறார். சந்திரனை ஒரு குறிப்பிட்ட தூரத்திலே வைக்கிறார். பல நட்சத்திரங்கள் இருக்கிறது. அவைகளை எண்ணமுடியாது. அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு ஸ்தானத்தை வைத்து, இதற்குமேல் நீங்கள் வரக்கூடாது என்று வைக்கிறார். எவ்வளவு அழகாக ஆண்டவர் வைத்திருக்கிறார்!

அதன்பின்பு, சில படிவங்களை **(Layers)** அவர் வைக்கிறார். சூரியனுடைய ஒளிக்கதிர்கள் நேரடியாக பூமியைத் தாக்காமல் இருப்பதற்காக, ஓசோன் படளத்தை **(Ozone Layer)** வைக்கிறார். அது, புற ஊதா ஒளிக்கதிர்களை **(Ultra Violet Rays)** கட்டுப்படுத்துகிறது. அந்த ஒளிக்கதிர்கள் மனுஷனை பாதிக்கும். சில தோல் சம்மந்தமான வியாதிகளை ஏற்படுத்தும். மரம், செடிகளும் வளரமுடியாது. அதனால், ஆண்டவர் அப்படி உண்டாக்கினார். ஆனால் மனுஷன் இன்றைக்கு ஓசோன் படிவத்தைக் கெடுத்துவிட்டான். அதில் ஓட்டை விழுந்துவிட்டது

**(Making big hole in the Ozone Layer)**. அதை எப்படி அடைக்கமுடியும்? முடியாது. அதனால்தான் அதிக வெயில் இருக்கிறது. வெயில் அடித்தால் அதிக வெயிலாக இருக்கிறது. மழை பெய்தால் வெள்ளம் வருகிறது. விஞ்ஞானத்தினாலே மனுஷன் உலகத்தைக் கெடுத்துவிட்டான். பூமியின் பருவநிலை மாறிவிட்டது **(Earth's climate is changing now)**. அதனால், பனிக்கட்டிகள் உருகி கடலில் சேர்வதால், கடல் மட்டம் உயர்ந்து, கடல் பூமிக்குள் வருகிறது. கடல் அரிப்பும் ஏற்படுகிறது. ஏன் அப்படி நடக்கிறது? மனுஷன் சுற்றுச் சூழலைக் கெடுத்துவிட்டான்.

நாலாம் எக்காளத்தில் என்ன வாசிக்கிறோம்?

## வெளிப்படுத்தல் 8: 12

12. நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொரு பங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது; பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் பாதிக்கப்பட்டுவிட்டது. ஓசோன் படிவம் பாதிக்கப்பட்டுவிட்டது. எல்லாமே மூன்றில் ஒரு பங்கு பாதிக்கப்பட்டுவிட்டது. ஆனால், ஆதியாகமத்தில் என்ன வாசிக்கிறோம்?

## ஆதியாகமம் 1: 16

16. தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.

ஆண்டவர் எல்லாவற்றையும் ஒரு ஸ்தானத்தில் வைக்கும்போது, மனுஷன் அதை எல்லாம் கெடுத்துவிட்டான்.

நோவா காலத்தில் என்ன நடந்ததென்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். நோவா காலம் விஞ்ஞான காலமாக **(Scientific Age)** இருந்தது. லோத்தின் நாட்களில் மனுஷனுடைய ஒழுக்கம் கெட்டுப்போனது **(Moral life decayed)**. ஒழுக்கமற்ற ஜனங்கள் **(Immoral People)** உலகத்தில் இருந்தார்கள். கீழ்ப்படியாத மக்கள். உணர்வில்லாத ஜனங்கள். முதலாவது உணர்வு வரவேண்டும். இரண்டாவது அறிக்கை செய்யவேண்டும். மூன்றாவது பாவத்தை விடவேண்டும். **"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்"**. உணர்வே இல்லை என்றால் என்ன அர்த்தம்? பரிசுத்த ஆவி இல்லை என்று அர்த்தம். நாம் தவறு செய்யக்கூடியவர்கள்தான், ஆனால் உணர்வு வரவேண்டும். "இவ்வளவு செய்தியை நாம் கேட்கிறோமே, கர்த்தருடைய வருகை சமீபமாக இருக்கிறதே, போதகர் சொல்வது சரிதானே, நாம் அதை விட்டுவிடுவோம், இனிமேல் செய்யவேண்டாம்" என்று நினைக்கவேண்டும்.

மனுஷன் இன்றைக்கு எல்லாவற்றையும் கெடுத்துவிட்டான். விஞ்ஞானத்தினாலே ஜனங்கள் கெட்டுப்போகிறார்கள். கணினியைக் **(Computer)** கண்டுபிடித்ததால் அநேகர் கெட்டுப்போகிறார்கள். மனுஷன் அன்றைக்கு நோவா காலத்தில், அணுவல்லமையால் **(Atomic Power)** பூமியை சூரியனைவிட்டுக் கொஞ்சம் இழுத்துவிட்டான். அது தன் அச்சிலிருந்து கொஞ்சம் சரிந்துவிட்டது **(The Earth was tilted on its axis)**. முதலில், பூமி உருண்டை நேராக இருந்தது. ஒவ்வொரு மாதத்திற்கும் முப்பது நாட்களும், ஒரு வருடத்திற்கு 360 நாட்களும் இருந்தது. ஆனால், இப்பொழுது ஒரு மாதத்திற்கு 28, 29, 30 அல்லது 31 நாட்கள் என்று மாறி மாறி வருகிறது. ஏன் அப்படி வந்தது? பூமியானது கொஞ்சம் சரிந்துவிட்டதால் அப்படியானது. அதனால் மழை வந்தது. நாலு காலங்கள் **(Four Seasons)** ஏற்பட்டது. அதற்கு முன்னால் மழையே கிடையாது.

இந்தக் காலத்தில் என்ன நடக்கும்? மனுஷன் அணுவல்லமையால் பூமியை சூரியனுக்குப் பக்கத்தில் கொண்டுபோகும்போது அது எரிந்துபோகும் என்று சகோ. பிரன்ஹாம் சொல்லியிருக்கிறார். பூமியைச் சூரியனைவிட்டுக் கொஞ்சம் தூரத்தில் கொண்டுபோகும்போது மழை வந்தது. வெள்ளம் வந்தது. சூரியன் பக்கத்தில் கொண்டுபோகும்போது அது எரிந்துபோகும் **(ABRAHAM'S COVENANT CONFIRMED-61-0210 - They shook the world out of its orbit, away from the sun throwed it sideways and brought the rains and destroyed the world by water. This time they are going to throw the same thing right straight back into the sun and burn it up again)**. மனுஷன் தன்னுடைய அறிவினால் இந்த உலகத்தை அழித்துப்போடுவான். மழையை எப்படி கொண்டுவரவேண்டும் என்று ஆண்டவருக்குத் தெரியும். மனுஷன் தன்னுடைய அறிவினால் அதைச் செய்கிறான். அணு வல்லமையால் மனுஷன் பூமியை எரித்துப்போடுவான் என்று சகோ. பிரன்ஹாம் தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார். நோவா காலம் நமக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது.

ஆதியாகமம் 1: 20 – 28 வரை நாம் வாசிக்கும்போது, கர்த்தர் நீர்வாழும் ஜந்துக்களை உண்டாக்கினார். பின்பு பறவைகளை உண்டாக்கினார். நாட்டு மிருகங்களையும், காட்டு மிருகங்களையும் உண்டாக்கினார். இவை எல்லாவற்றையும் உண்டாக்கினபின்பு, எதற்காகக் காத்திருக்கிறார்? இதோ, மனுஷன் வரவேண்டும். அல்லேலூயா. பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; என்று தேவன் தம்முடைய இருதயத்தில் நினைத்தார். அவர் தம்முடைய தன்மைகளோடு **(Attributes)** வாழ்ந்துகொண்டிருக்கிறார். இப்பொழுது அவர் உண்டாக்கும்போது மனுஷன் அங்கே வருகிறான். தேவன் எப்பொழுதுமே தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு ஒரு

வழியை உண்டுபண்ணுகிறார் **(God always provide a way for His own elect)**. ஆமென். மனுஷன் வாழவேண்டுமென்றால் அவனுக்கு நல்லத் தண்ணீர் தேவை, அவனுக்கு மீன்கள் தேவை, அவனுக்கு பறவைகள் தேவை, அவனுக்கு மிருகங்கள் தேவை என்று, இவ்விதமான ஒரு உயிரின வாழ்க்கைச் சூழலை **(Ecology)** அவர் உண்டுபண்ணி, கடைசியாக மனுஷனை அங்கே கொண்டுவருகிறார். அல்லேலூயா.

ஆதியாகமத்தில் என்ன பார்க்கிறோம்? ஆண்டவர் இதெல்லாம் பார்க்கும்பொழுது, அவர் மிகவும் சந்தோஷமாகிவிட்டார் **(stimulated)**. பல வகையான மிருகங்கள் அங்கே இருக்கிறது. பூனையில் இருந்து சிங்கம் வரை அவர் உண்டாக்குகிறார். எறும்பிலிருந்து யானை வரைக்கும் அவர் உண்டாக்குகிறார். புலியை உண்டாக்குகிறார். காளையை உண்டாக்குகிறார். அது ஒரு சுமை சுமக்கிற மிருகமாக இருக்கிறது. பலி செலுத்துவதற்கான மிருகமாக இருக்கிறது. குதிரையை உண்டாக்குகிறார். அது இரதத்தை இழுக்கிறதாக இருக்கிறது. ஆட்டை உண்டாக்குகிறார். செம்மறி ஆடு தீங்கற்றதாக **(innocent)** இருக்கிறது. புறாக்களை அவர் உண்டாக்குகிறார். எல்லாவற்றையும் எதற்காக உண்டாக்கினார்? மனுஷனுக்காக. அல்லேலூயா. அவர் ஆதாமைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறார் **(He was thinking about Adam)**.

ஆதாம் வரவேண்டுமென்றால் இதெல்லாம் வரவேண்டும். அவனுக்குத் தட்பவெப்ப அளவு **(temperature)** எவ்வளவு வேண்டும் என்று ஆண்டவருக்குத் தெரியும். நமக்குத் தட்பவெப்ப நிலை அதிகமாக இருப்பதால்தான் குளிர்சாதன வசதியைக் **(Air condition)** கொண்டுவருகிறோம். இப்படி, அவனுக்கு ஏற்ற சூழ்நிலையை அவர் உண்டாக்கி, கடைசியாக ஆதாம் வரும்போது, "இதோ, என்னுடைய மகன் வந்துவிட்டான்" **(My son comes)**. அல்லேலூயா. மகன் வந்து பார்க்கும்போது, "அப்பா எல்லாவற்றையும் எவ்வளவு அழகாக உண்டாக்கியிருக்கிறார். என்ன அழகாக தோட்டத்தை உருவாக்கியிருக்கிறார், என்ன அழகாக மிருக ஜீவன்களைப் படைத்திருக்கிறார், எல்லாவற்றையும் எனக்காகத்தான் சிருஷ்டித்திருக்கிறார்" என்று அவன் பார்த்துச் சந்தோஷப்படவேண்டும். அல்லேலூயா. கடைசியில், அவருடைய மகன் ஆதாம் அங்கே காட்சியில் தோன்றினான். அல்லேலூயா.

இப்பொழுது மனுஷன் விழுந்துபோனான். அவன் விழுந்துபோகும்போது, அவன் ஆதிக்கத்தின்கீழ் இருந்த எல்லாமே விழுந்துபோனது. ஒரு குடும்பத்தில் தகப்பனோ தாயோ கீழ்ப்படியாமல் போகும்போது, பிள்ளைகளும் கீழ்ப்படியாமல் போகும். ஆண்டவர் இயற்கையை மனுஷனின் ஆதிக்கத்தின்கீழ் கொடுத்திருந்தார். மனுஷன் விழுந்துபோகும்போது, அவனுடைய ஆதிக்கத்தின்கீழ் இருந்த இயற்கையும்

விழுந்துபோனது. ஆனால் அவனுக்குள் ஒரு வாஞ்சை இருக்கிறது. என்ன வாஞ்சை? மறுபடியும் ஏதேனுக்குள் போகவேண்டும். அல்லேலூயா. அந்த ஏதேனின் பரிபூரணத்தை **(Edenic Perfection)**, அந்த அழகை மறுபடியும் பார்க்கவேண்டும், என்று அவனுக்கு ஆசை. ஆனால், போவதற்கு வழி தெரியாது. அவனால் சிருஷ்டிக்கமுடியுமா? அவனால் சிருஷ்டிக்கமுடியாது. ஆனால் உற்பத்தி **(Manufacture)** செய்யமுடியும். தேவன் ஒருவரால் மட்டும்தான் சிருஷ்டிக்கமுடியும் **(God is the only Creator)**. அல்லேலூயா. சாத்தானால் சிருஷ்டிக்கமுடியாது. மனுஷனால் சிருஷ்டிக்கமுடியாது.

ஆதாமும் ஏவாளும் ஏதேனைப் பார்த்தார்கள். ஏதேனில் வாழ்ந்தார்கள். அந்தச் சுற்றுச் சூழல் மிகவும் அருமையாக இருந்தது. நல்லத் தண்ணீர் இருந்தது. ஒரு மரத்திலும் இலையே உதிராது. அங்கே மரணம் என்பதே கிடையாது. அங்கே பயம் என்பதே கிடையாது. பரலோகமும் பூலோகமும் இணைந்திருந்தது. ஆண்டவர் எந்த நேரத்திலும் வந்து, தம்முடைய பிள்ளைகளோடு பேசினார். சம சீதோஷ்ண நிலை இருந்தது. நடுங்கும் குளிரும் கிடையாது. அதிக வெயிலும் கிடையாது. மிக நல்ல சூழ்நிலை இருந்தது. ஆண்டவர் எல்லாவற்றின்மேலும் அவனுக்கு ஆதிக்கத்தைக் கொடுத்தார். ஆதியாகமம் 1:28ல் என்ன வாசிக்கிறோம்? பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். "நீங்கள் சகலத்தையும் ஆண்டுகொள்ளுங்கள்" என்று அதிகாரத்தை கொடுத்திருந்தார். அவனை ராஜாவாக **(King)** மாற்றியிருந்தார். ஒரு குட்டி தேவனைப்போல **(Minor God)** வைத்திருந்தார். ஒரு நாளிலே அவன், அந்த பரிபூரணத்தில் இருந்தான். இப்பொழுது பரிபூரணத்தில் இருந்து விழுந்துபோய்விட்டான்.

"ஒரு காலத்தில் நாங்கள் வசதியாக இருந்தோம். நாங்கள் பெரிய பங்களாவில் இருந்தோம். நாங்கள் அப்படி இருந்தோம், இப்படி இருந்தோம், இப்பொழுது நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம், நாங்கள் ஏழையாகிவிட்டோம். எப்படி நாங்கள் பழைய நிலைமைக்குப் போவது?" என்று சிலர் யோசிக்கிறார்கள். முன்பு நாங்கள் உயர்ந்திருந்தோம். இப்பொழுது நாங்கள் தாழ்ந்திருக்கிறோம். எப்படி நாங்கள் பழைய நிலைமைக்குப் போவது? என்று சொல்லி அதற்காக பிரயாசப்படுகிறார்கள், உழைக்கிறார்கள். அதைப்போலத் தான். இதோ, ஏதேனின் பரிபூரணத்தில் இருந்து விழுந்துபோனான். இப்பொழுது அவன் பாவநிலைமைக்கு வந்துவிட்டான். எப்படி மறுபடியும் அந்த ஏதேனுக்குப் போவதென்று மனுஷன் நினைக்கிறான். அல்லேலூயா. எத்தனைப் பேர் ஏதேனுக்குப் போகவேண்டும் என்று நினைக்கிறோம்? அல்லேலூயா.

இப்பொழுது, தாவர வர்க்கங்கள் இருக்கிறது, பறவைகள் இருக்கிறது, மிருக ஜீவன்கள் இருக்கிறது, எல்லாமே இருக்கிறது, ஆனால் அவைகளின்மேல் அவனுக்கு ஆதிக்கம் இல்லை **(He has no dominion over them)**. முன்பு அவன் என்ன சொன்னாலும் இயற்கை அவனுக்குக் கீழ்ப்படியும். காற்றைப் பார்த்து வீசாதே என்றால் வீசாது. மரத்தைப் பார்த்து, “அங்கே போ” என்றால் போகும். ஆண்டவர் ஆதாமுக்கு ஒரு விவாக வாழ்க்கையைக் கொடுத்து, அவனுக்குக் குளிர்சாதன வசதி செய்ததுபோல எல்லாவற்றையும் கொடுத்திருந்தார். ஆனால் பாவத்தில் விழுந்துபோன பின்பு, எதுவுமே அவனுக்குக் கீழ்ப்படியாது. புயல் அடித்தால் அதைத் தடுக்கமுடியாது. வெள்ளம் வந்தாலும் அதைத் தடுத்து நிறுத்தமுடியாது. வெயில் அதிகமாக அடித்தால் அவனால் அதைக் குறைக்க முடியாது. இயற்கையின்மேல் இருந்த ஆதிக்கத்தை அவன் இழந்துபோனான். நித்திய ஜீவனை இழந்துபோனான். உலகத்தின் உரிமைப் பத்திரத்தை **(Title Deed)** உடையவனாயிருந்தான். இந்தப் பூமிக்கு அவன் சொந்தக்காரனாக இருந்தான். ஆண்டவர் அவனுக்கு அந்தப் பத்திரத்தைக் கொடுத்திருந்தார். **(He has the deed of purchase. The deed shows that he is the legal owner of that property)**. இப்பொழுது, ஆண்டவர் அவன் கையிலிருந்து அதைப் பறித்துக்கொண்டார்.

நாம் பெரிய பங்களாவைப் போல ஒரு வீட்டைக் கட்டிவைத்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். நாம் வெகுதூரத்தில் இருக்கிற நம்முடைய சொந்த ஊருக்குச் சென்றுவிட்டு, பின்பு திரும்பிவந்து பார்த்தால், நம்முடைய வீட்டில் சில துஷ்டமனுஷர்கள் வந்து, அங்கே படுத்துக்கொண்டும், குடித்துக்கொண்டும், சந்தோஷமாக உட்கார்ந்துக்கொண்டிருந்தால், நாம் என்ன செய்வோம்? “சரி இருக்கட்டும், ஆண்டவர் எல்லாரையும் நேசிக்கிறார், அதனால் நீங்களும் கொஞ்சம் சந்தோஷமாக இருங்கள் என்று சொல்லுவோமா?” யாராவது அப்படி சொல்லுவோமா? “நீங்கள் எப்படி எங்களுடைய வீட்டிற்குள் போவது? இப்பொழுதே இடத்தைக் காலிசெய்கிறீர்களா அல்லது போலீஸில் சொல்லி உங்களைத் துரத்தவேண்டுமா?” என்று கேட்போம். இன்றைக்கு அதைப்போல நடந்திருக்கிறது. ஆண்டவர் தம்முடைய குமாரனாகிய ஆதாமுக்கு எல்லாவற்றையும் கொடுத்தார். ஆனால் இன்றைக்கு இந்த உலகம், பொல்லாத பாவிகள், துன்மார்க்கர் கையில் கொடுக்கப்பட்டு, அவர்கள் இங்கே சந்தோஷமாக இருக்கப் பார்க்கிறார்கள். எல்லாவற்றையும் கெடுத்து, தேவனுடைய சிருஷ்டிப்புகளை எல்லாம் கெடுத்து, அரசியல்வாதிகள், பாவிகள், துன்மார்க்கர் இந்த உலகத்தில் ஆளுகை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அதைக் கொடுத்திருந்தார். அல்லேலூயா.

ஒரு கிறிஸ்துவ வீடு எப்படி இருக்கவேண்டும்? இதோ, தகப்பன் அங்கே இருக்கவேண்டும். பிள்ளைகள் பந்தியைச் சுற்றிலும் இருக்கவேண்டும். ஜெபம்பண்ணி ஆகாரத்தைப் புசிக்கவேண்டும். வேதத்தை வாசித்து ஜெபிக்கவேண்டும் **(Read the Bible and Pray)**. இப்பொழுது, இந்த கிறிஸ்துவ சூழ்நிலையே **(Christian environment)** அநேக வீட்டில் இல்லை. அவர்கள் தொலைக்காட்சியைப் **(Television)** பார்த்துக்கோண்டும், கணினியில் **(Computer)** சினிமா படக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டும் இருந்தால், அங்கே எப்படி கிறிஸ்துவ சூழ்நிலை வரும்? குழந்தைகளை பிரதிஷ்டைச் செய்யும்போது "நீங்கள் உங்கள் குழந்தையை கிறிஸ்துவ சூழ்நிலையில் வளர்ப்பீர்களா?" என்று கேட்கிறேன். அதனால்தான் சகோ. பிரன்ஹாம், வீட்டில் தொலைக்காட்சி வைக்கக்கூடாது என்கிறார். அங்கே தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தால், கிறிஸ்துவ சூழ்நிலை இருக்குமா? பாவப் பிரசன்னமும், பிசாசின் கிரியைகளும்தான் அங்கே இருக்கும். ஆதாமும், அவன் மனைவியும், எல்லா மிருக ஜீவன்களும் அங்கே சுற்றி இருக்கும்போது, அது மிகவும் நன்றாக இருந்தது. அங்கே கிறிஸ்துவ சூழ்நிலை இருந்தது. ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை வந்து பார்க்கிறார். அவர்களுக்கு முத்தம் கொடுக்கிறார். "என் பிள்ளைகளே, இன்றைக்கு நீங்கள் சந்தோஷமாக இருந்தீர்களா? "ஆம் ஆண்டவரே" என்று சொல்லுகிறார்கள். அதன்பின்பு ஆண்டவர் போய்விடுகிறார். காலையிலே வருகிறார். அவர்களோடு ஐக்கியப்படுகிறார். அப்படியாக தகப்பன், பிள்ளைகள், பறவைகள், மிருகங்கள் என்று எல்லாமே அழகாக இருந்தது. இப்பொழுது எல்லாமே கெட்டுப்போய்விட்டது.

மறுபடியும் அந்தச் சூழ்நிலைக்குப் போகவேண்டும் என்று மனுஷன் விரும்புகிறான். ஆனாலும் எப்படி அங்கே போகவண்டும் என்று அவனுக்குத் தெரியவில்லை **(He wants to come back in that place. But he doesn't know how to come back)**. இயேசுகிறிஸ்துவே வழியாக இருக்கிறார். அல்லேலூயா. கர்த்தருடைய வார்த்தையே வழியாக இருக்கிறது. ஆமென். ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. அல்லேலூயா. ஏழாம் தூதனின் சத்தமானது மறுபடியும் ஏதேனைக் கொண்டுவரும். மறுபடியும் அந்த உலகத்தைக் கொண்டுவரும். ஆமென். ஏழாம் எக்காளத்தில் முற்றிலுமான அழிவும் **(Total annihilation)** இருக்கிறது. அதே நேரத்தில் அது ஆயிரவருட ஆளுகையையும் **(Millennium)** கொண்டுவருகிறது.

ஆனால் ஆயிரவருட ஆளுகையை ஆண்டவர் கொண்டுவருவதற்கு முன்னதாக, நன்றாக கவனியுங்கள், ஏதேனை ஆண்டவர் திரும்ப

அளிப்பதற்கு முன்னதாக, இந்தப் பூமியை அவர் முற்றிலுமாகத் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முன்னதாக, அவர் இந்த உலகத்தின் உரிமைப் பத்திரத்தை நமக்குத் தரவேண்டும் **(Before He completely gets it over under the Seventh trumpet, He comes down and gives the Deed back)**. ஒரு நிலத்தையோ, அல்லது ஒரு வீட்டையோ நாம் வாங்கவேண்டுமானால், முதலில் அந்தப் பத்திரத்தை நாம் பார்க்கவேண்டும். அதில் ஏதாவது வில்லங்கம் இருக்கிறதா, அது அந்த நபருக்குத்தான் சொந்தமா என்று பார்க்கவேண்டும். முதலாவது அந்த பத்திரம் நம்முடைய கையில் வரவேண்டும். அதை நம்முடைய பேரில் பதிவு செய்யவேண்டும். பட்டா எல்லாம் மாறினபின்பு, நம்முடைய கையில் அது வந்த பின்பு, நாம் போய் அந்த வீட்டை எடுத்துக்கொள்ளலாம்.

இதோ, உரிமைப் பத்திரம் **(Title Deed)** ஆதாமைவிட்டுப் போனது. பின்பு அவனை ஏதேனைவிட்டுத் துரத்திவிட்டார். இப்பொழுது, கர்த்தர் இறங்கி வந்திருக்கிறார். ஏழாம் தூதனின் செய்தி வந்திருக்கிறது. ஏழாம் எக்காளம் வந்திருக்கிறது. எதற்காக? நீங்கள் ஆயிரவருட ஆளுகையை சுதந்தரித்துக்கொள்வதற்கு முன்னதாக, உங்களுக்கு அந்த உரிமைப் பத்திரத்தைக் கொடுப்பதற்காக. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? ஆதாம் இழந்துபோனதை இன்றைக்குத் தேவ புத்திரர் கையில் கொடுத்திருக்கிறார். அல்லேலூயா. அது என்ன? பூமியின் உரிமைப் பத்திரம் **(Title Deed of the Earth)**. அது என்ன? மீட்பின் திட்டம் **(Plan of Redemption)**.

ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு என்ன நடந்தது? இந்தக் குதிரை வந்தது, அந்தக் குதிரை வந்தது, சிங்கம் வந்தது, காளை வந்தது. இதுதான் நம்முடைய செய்தியில் இருக்கிற அநேகர் சொல்லுவார்கள். எப்பொழுதும் “முத்திரைகள் **(Seals)**” “முத்திரைகள் **(Seals)**” என்று சொல்லுவார்கள். மிகவும் வேதனையான காரியம். ஒன்றுமே தெரிவதில்லை. எழுத்தின்படிக் கூடத் தெரியவில்லை. இந்த ஜீவன் வந்தது, அந்த ஜீவன் வந்தது என்று சொல்லுவார்கள். அதுதான் ஏழு முத்திரைகளா? அது மீட்பின் திட்டமாக இருக்கிறது. அல்லேலூயா. மீட்பின் திட்டம் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது **(The Plan of Redemption is revealed now)**. அல்லேலூயா. ஒரு நாளில் அது இரகசியமாக இருந்தது. இன்றைக்கு அது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆமென். அது தெரியாமல், அது வந்தது, இது வந்தது என்று சொல்லிக்கொண்டு, நாங்கள் நாற்பது வருடமாக ஊழியம் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். வேதத்தையே படிக்காமல், எப்பொழுதும் அந்த “ஏழு முத்திரைகள்” புஸ்தகத்தையே படிப்பது. நம்மோடு வாதம்பண்ணுவதற்கு வருவார்கள். சண்டைக்குக் கூட வருவார்கள். அது மீட்பின் திட்டம். அல்லேலூயா. அது வேதம் முழுவதும் மறைக்கப்பட்டிருந்தது. ஆதியாகமத்தில் இருந்து

வெளிப்படுத்தல் வரைக்கும் இருக்கிறது. அது இன்றைக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அல்லேலூயா.

முத்திரைகள் திறக்கப்பட்டதால் இரகசியம் வெளிப்பட்டிருக்கிறது. என்ன இரகசியம்? மீட்பின் திட்டம். ஆதாம் இழந்துபோனதை எப்படி மறுபடியும் பெற்றுக்கொள்கிறான் என்ற இரகசியம். ஆதாம் இழந்துபோன உரிமைப் பத்திரம், இப்பொழுது, அதற்கு மூலச்சொந்தக்காரரான சர்வ வல்லமையுள்ள தேவனின் கைகளில் உள்ளது. அது பூமிக்கும், நித்திய ஜீவனுக்கும் உரிமைப் பத்திரமாக இருந்தது. ஆதாம் அதை இழந்தபோது, சாத்தானின் அசுத்தமான கரங்கள் அதை எடுத்துக்கொள்ளமுடியவில்லை. அது மூலச்சொந்தக்காரரான தேவனை அடைந்தது என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார் **(THE BREACH BETWEEN THE SEVEN CHURCH AGES AND THE SEVEN SEALS - The forfeited title deed is now in the hands of the original owner, Almighty God. The title deed to the earth and to Eternal Life, when Adam forfeited it, then Satan's dirty hands could not take it; so it went back to its original owner, God Himself)**. சாத்தான் இப்பொழுது நம்முடைய இடத்தை சட்டத்திற்கு விரோதமாக ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறான். ஆதாம் பாவம் செய்ததினால் அவன் அதை வைத்துக்கொள்ளமுடியாது. சாத்தானும் அதை வைத்துக்கொள்ள முடியாது. அது தேவனுடைய கரத்தில் சென்றுவிட்டது. அல்லேலூயா.

வெளிப்படுத்தல் 5: 1ம் வசனத்திலே, அது தேவனுடைய கரத்தில் இருந்தது என்று வாசிக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் ஆதியாகமத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அது முழு வேதத்தையும் சுட்டிக்காட்டுகிறது. அது தேவனுடைய கரத்தில் இருந்தது. இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருந்த ஆட்டுக்குட்டியானவர் அந்த புஸ்தகத்தை வாங்கினார். அல்லேலூயா. அதை வாங்கி, இன்றைக்கு நம்முடைய கையில் கொடுத்திருக்கிறார். ஆமென். அவரே அதை வைத்துக்கொள்ளவில்லை. அது தேவனுடைய கரங்களில், மீட்பின் உரிமையைக் கோருபவர்க்காகக் காத்துக்கொண்டிருந்தது **(In tha hands of God, waiting for redemption claims)**.

அடிக்கப்பட்ட வண்ணமாயிருந்த ஆட்டுக்குட்டியானவர் ஏழு சபைக்காலங்கள் முடிந்தவுடனே, அவர்போய் அதை வாங்கிவிட்டார். இன்றைக்கு நாம் அந்த புஸ்தகத்தை வாங்கியிருக்கிறோம். அல்லேலூயா. அதற்கு ஒரு காலம் குறிக்கப்பட்டிருந்தது **(Time appointed)**. ஏழு சபைக்காலங்கள் முடியவேண்டும். ஐம்பதாவது வருடம் வரவேண்டும். யூபிலி **(Jubile)** வரவேண்டும். யூபிலி வரும்போது, உலகத்தை ஆண்டவர் நமக்குத் தருவதற்கு முன்னதாக, ஏதேனை நமக்குத் திருப்பி அளிப்பதற்கு முன்னதாக, தேவனுடைய ராஜ்யத்தை நமக்குத் தருவதற்கு முன்னதாக, உரிமைப் பத்திரத்தை நம்முடைய கைகளில் தந்திருக்கிறார். அது தேவ

புத்திரர் கையில் வரவேண்டும் **(It is going to come right back to the Sons of God)**. இந்த மாசுபட்ட உலகத்தை நாம் பெற விரும்பவில்லை. இது சுத்திகரிக்கப்பட்டப் பின்பு, நாம் இதைப் பெறப்போகிறோம் **(We are not going to get it polluted, it is going to be purified)**. இதைச் சுத்திகரிப்பதற்காகத்தான் ஆறாவது முத்திரை வருகிறது. ஆறாம் முத்திரையில், 1,44,000 பேர் சுத்திகரிக்கப்படுகிறார்கள், புத்தியில்லாத கன்னிகைகள் சுத்திகரிக்கப்படுகிறார்கள், இந்தப் பூமியும் சுத்திகரிக்கப்படுகிறது. ஆண்டவர் இதைச் சுத்திகரித்தப் பின்பு நமக்குக் கொடுக்கிறார். அல்லேலூயா.

உதாரணமாக, நாம் ஒரு நிலத்தை வாங்கினால், அங்கே சாக்கடை மற்றும் கல்லுகளும், முள்ளுகளும் இருக்குமென்றால், அங்கே நாம் வீட்டைக் கட்டமுடியாது. அந்த இடத்தை நன்றாக சுத்திகரிக்கவேண்டும். அதற்குப்பின்புதான் அங்கே வீட்டைக் கட்டமுடியும், தோட்டத்தை வைக்கமுடியும். எதைச் செய்தாலும், முதலில் அந்த இடம் சுத்திகரிக்கப்படவேண்டும். ஆண்டவர் ஆறாம் முத்திரையை எதற்காக வைத்திருக்கிறார்? அது சுத்திகரிக்கும் முத்திரை **(Purging Seal)**. எத்தனைப் பேர் நாம் கர்த்தரைக் குறித்து சந்தோஷப்படுகிறோம்? இயேசுகிறிஸ்து உங்களுக்காக இவ்வளவு காரியங்களைச் செய்கிறார். ஆனால் நாம் அவரை எவ்வளவு நேசிக்கிறோம்?

எலிமெலேக்கின் சுதந்தரமாகிய, மக்லோன், கிலியோனின் சுதந்தரமானது, போவாஸ், ரூத், நகோமிக்கு கொடுக்கப்படவேண்டும். அல்லேலூயா. நம்முடைய மகனுக்கு ஒர் நிலத்தை வாங்கி, ஒரு ஒப்பந்தக்காரரை **(Contractor)** வைத்து, அங்கே நாம் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்து, அந்த வீட்டில் போக்கிரிகள் வந்து இருந்தால், நாம் அவர்களை சும்மாவிடுவோமா? “நான் என்னுடைய மகனுக்காக இந்த வீட்டைக்கட்டி இருக்கிறேன். நீங்கள் இங்கே வந்து குடித்துவிட்டு ஆட்டம்போடுவதற்காகவா இந்த வீடு இருக்கிறது?” என்று அவர்களை அங்கேயிருந்து துரத்திவிடுவோம். நம்முடைய ஆண்டவரும் அதைப்போலத்தான் செய்கிறார். “நான் இந்த உலகத்தை தேவ புத்திரர்களுக்காகக் கொடுத்திருக்கிறேன். ஆதாமின் சந்ததிக்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால் சர்ப்பத்தின் வித்துக்களாகிய நீங்கள் இதைக் கெடுத்துப்போட்டீர்கள். உங்களுடைய விஞ்ஞாத்தினாலேயும், உங்களுடைய பாவத்தினாலேயும் இதைக் கெடுத்திருக்கிறீர்கள். நீங்கள் வெளியே போங்கள்” என்று கர்த்தர் அவர்களைத் துரத்துவார். பூமியைக் கெடுத்தவர்களை கெடுப்பதற்குக் காலம் வந்தது. அல்லேலூயா.

கர்த்தருடைய மகன் ஆதாம். ஆனால், மனுஷன் இந்த உலகத்தை மோசமான அரசியலால் **(Rotten politics)** கெடுத்திருக்கிறான். பூமியைத் தோண்டி அங்கே இருக்கும் பெட்ரோல், பளிங்குக்கல், **(Petrol, Marbles)**

போன்ற வளங்களை **(Resources)** எடுத்து, இதைச் சீர்குலைத்திருக்கிறான். அணு ஆற்றலுக்குப் பயன்படும் விண்மம் **(Uranium)** என்ற பொருளை அதிகமாக எடுத்து, அணு மின் நிலையங்களைக் **(Nuclear Power Plants)** கண்டுபிடித்து, தொழிற்சாலைகளை **(Industries)** ஏற்படுத்தி, இரும்பு, செம்பு மற்றும் அநேக உலோகங்களைத் தோண்டி எடுத்து பூமியைக் கெடுத்துவிட்டான்.

மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம் பொல்லாததாக இருக்கிறது.

**ஆதியாகமம் 6: 5**

5. மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,

மனுஷன் பேராசை **(Greedy)** உடையவனாய் இருக்கிறான். பூமியைத் தோண்டி தோண்டி எடுத்து, வியாபாரம்பண்ணுகிறான். மலைகளையெல்லாம் உடைத்து, கருங்கற்களை **(Granite)** எடுத்து, உலகத்தின் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறான். கடலில் இருக்கிற கனிமங்களை **(Minerals)** எடுப்பதற்காகக் கடலையும் கெடுத்து, மனுஷன் பூமியை நாசமாக்கிப்போட்டான். பேராசையினாலும், சுயநலத்தினாலும் அப்படிச் செய்திருக்கிறான். கர்த்தர் உண்டாக்கின சிருஷ்டிப்புகளை நாசம்பண்ணிவிட்டான்.

இதனால் பூமியானது வேதனைப்படுகிறது. அது பிரசவ வேதனைப்படுகிறது **(Birth Pain)**. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் வார்த்தையை உரைத்தபோது, அந்த ஜனங்களுக்குப் பிரசவவேதனை வந்ததாம். அந்த பிரசவவேதனை மனுஷகுமாரனைக் **(Son of Man)** கொண்டுவந்தது. அது கிறிஸ்துவைப் **(Christ)** பிறப்பித்தது. அதைப்போல, புதிய ஏற்பாட்டிலே அபிஷேகம்பண்ணப்பட்டப் பிரசங்கியார்கள் **(Anointed Preachers)** வார்த்தையைப் போதிக்கும்பொழுது, ஏழு தூதர்களும் **(Seven Angels)** பிரசங்கம்பண்ணும்போது, அது மக்களுக்கு ஒரு பிரசவவேதனையை ஏற்படுத்தி, கடைசி காலத்திலே ஒரு மணவாட்டியை **(Bride)** பிறப்பித்திருக்கிறது. அல்லேலூயா.

சபைகளெல்லாம் சீர்கெட்டுப்போகும்போது, வார்த்தையை விட்டு விலகும்போது, உண்மையான போதகர் என்ன நினைக்கிறார்? “நாம் ஒரு உண்மையான போதகத்தைப் பண்ணவேண்டும்” என்று நினைக்கிறார். ஒரு உண்மையான சபையைக் கொண்டுவரவேண்டும் என்று நினைக்கிறார். சிலரிடம் அவர்களுடைய தவறை நாம் கேட்டால், அவர்கள், “மற்றவர்களும் அப்படிச் செய்கிறார்கள்”, என்று மற்றவர்களைப் பற்றிச் சொல்லுவார்கள். அது பிசாசின் புத்தியாக இருக்கிறது. தங்களுடைய தவறைத்தான் ஒத்துக்கொள்ளவேண்டும். மற்றவர்கள் செய்கிறார்கள்,

அதனால் நானும் செய்கிறேன் என்பது பிசாசின் ஆவியாய் இருக்கிறது. ஆனால் உண்மையான தேனுடைய பிள்ளைகள், பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள், "மற்றவர்கள் செய்கிற தவறை நாம் செய்யக்கூடாது" என்று அதை ஒரு எச்சரிப்பாக நினைப்பார்கள். அல்லேலூயா.

மற்றச் சபைகள் சீர்கெட்டுப்போனாலும், நாம் அப்படி போகக்கூடாது என்று இருக்கவேண்டும். உலகம் இன்றைக்குச் சீர்கெட்டுப்போனது. அவர்கள் அப்படி உடை உடுத்துகிறார்கள், அதனால் நானும் அப்படி உடுத்துகிறேன் என்று சொல்லலாமா? நான் அவர்களுக்கு முன்பாக ஒரு மாதிரியாக இருக்கவேண்டும் என்று நினைக்கவேண்டும். இவ்விதமான ஒரு வைராக்கியம் நமக்குத் தேவை. நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவர் வைராக்கியமுள்ளவராய் இருக்கிறார். அல்லேலூயா.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கடினமாகப் பிரசங்கம்பண்ணும்போது, அது இயேசுகிறிஸ்துவைக் **(Jesus Christ)** கொண்டுவந்தது. ஒரு பரிபூரண மனிதனைக் **(Perfect Man)** கொண்டுவந்தது. இப்பொழுது ஏழு தூதர்கள் வந்து கடினமாக வார்த்தையைப் போதிக்கும்போது, அது கடைசி காலத்தில் ஒரு கறைதிரை இல்லாத பரிபூரண மணவாட்டியைக் **(Perfect Bride)** கொண்டுவருகிறது. அல்லேலூயா. இந்தப் பூமியை மனுஷன் கெடுத்துப்போட்டான். இந்தப் பூமி பிரசவவேதனைப்பட்டு, அது ஒரு பரிபூரண ஏதேனைக் **(Perfect Eden)** கொண்டுவரப்போகிறது. எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? ஆதாம், ஏவாள், ஏதேன் **(Adam, Eve & Eden)**. இரகசியமே **(Mystery)** அங்கேதான் இருக்கிறது.

முதலாம் உலக யுத்தத்தில் பூமி பிரசவவேதனைப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்திலும் அது பிரசவவேதனைப்பட்டு, இப்பொழுது மூன்றாம் உலக யுத்தத்தில் அது புதிய உலகத்தைப் பிறப்பிக்கப்போகிறது. அல்லேலூயா. "பிரசவவேதனை **(65-0124 Birth Pains)**" என்ற செய்தியில் சகோ. பிரன்ஹாம் அவ்விதமாகச் சொல்லுகிறார். வெளிப்படுத்தல் 21:1 ம் வசனத்திலே என்ன வாசிக்கிறோம்?

1. பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

புதிய பூமி **(New Earth)** வரவேண்டுமென்றால், பழைய பூமி **(Old Earth)** விலகவேண்டும். புதிய வானம் **(New Heaven)** தோன்றவேண்டுமென்றால், பழைய வானம் **(Old Heaven)** விலகவேண்டும். ஆகையால், இந்த உலகம் **(World)** அழியவேண்டும். இந்த உலக முறைமை **(World Order)** அழியவேண்டும். அப்பொழுதுதான் புதிய உலகம் ஏற்படும். மனுஷன் தன்னுடைய அறிவினாலே உலகத்தைக் கெடுத்துவிட்டான் **(Man destroys himself by wisdom)**. ஒரு நல்ல சுற்றுச்சூழலை ஆண்டவர்

உண்டாக்கினார். ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கும்படி உண்டாக்கினார். ஆனால் இப்பொழுது மனுஷன் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டான். பின்பு ஆண்டவர் அந்தப் புதிய சுற்றுச்சூழலைக் கொண்டுவருவார். இதோ, ரூத் தன்னுடைய சுதந்தரத்துக்கு வருகிறாள். நகோமி தன்னுடைய சுதந்தரத்துக்கு வருகிறாள். எலிமெலேக்கின் சுதந்தரம் மீட்கப்படுகிறது. அல்லேலூயா.

சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையாகும்படி அது பிரசவவேதனைப்படுகிறது என்று எழுதப்பட்டிருக்கிறது.

**ரோமர் 8: 20**

20. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிறநம்பிக்கையோடே,

22. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது.

எல்லா சிருஷ்டிகளும் தேவபுத்திரர் வெளிப்படவேண்டுமென்று **(Manifestation of the Sons of God)** மிகுந்த ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் இன்றைக்கு தேவபுத்திரர்களாக இருக்கிறீர்கள். கடைசி காலத்திலே ஒரு பரிபூரணமான மணவாட்டி வரவேண்டும். அல்லேலூயா. தவறான உபதேசத்தில் போகிறவர்கள் நமக்கு ஒரு எச்சரிப்பு. பாவத்திலே போகிறவர்களும், பின்வாங்கிப்போகிறவர்களும் நமக்கு எச்சரிப்பாய் இருக்கிறார்கள். ஒரு வாலிபன் கெட்ட நண்பர்களை உடையவனாய் இருந்தால் அது ஒரு எச்சரிப்பு. ஒரு பெண் தன் மனம்போனபோக்கில் உடை உடுத்தினால் அது ஒரு எச்சரிப்பு. "நாம் அவர்களைப்போல் இருக்கக்கூடாது" என்று நினைக்கக்வேண்டும். அப்படி இருக்கிறவர்களை நாம் புறக்கணிக்கவேண்டும். ஒரு பரிபூரண மணவாட்டியாய் இருந்தால், அப்படித்தான் செய்வார்கள். அவ்விதமான ஒரு மணவாட்டி வரவேண்டும் என்றுதான் சர்வ சிருஷ்டியும் காத்திருக்கிறது. ஏவாள் வராமல் ஏதேன் வரமுடியாது. ஆகையால் எல்லாமே இந்த இரண்டாம் ஏவாள் **(II Eve)** வரவேண்டும் என்று காத்திருக்கிறது. உலகத்திற்கு ஒத்த வேஷம் அவர்கள் தரிக்கக்கூடாது. உலகத்தில் இருக்கிற பாவிகள்போல அவர்கள் நடக்கக்கூடாது. அவர்கள் முற்றிலும் வார்த்தைக்கென்று ஜீவிக்கவேண்டும். அல்லேலூயா.

நான்கு பொருட்கள் **(Four elements)** அங்கே இருக்கிறது. உயிரில்லாதவைகளையும் **(Non Living Things)** ஆண்டவர் உண்டாக்கியிருக்கிறார். இரும்பு, செம்பு, கனிமங்கள், பளிங்குக்கற்கள் போன்ற அநேக பொருட்களை ஆண்டவர் இந்தப் பூமியில்

உண்டாக்கியிருக்கிறார். மரங்கள், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் போன்றவைகளையும் **(Living Things)** உண்டாக்கியிருக்கிறார். மனுஷன் இவைகளைப் புசித்து அவன் ஜீவிக்கிறான். அவன் பலுகிப் பெருகுகிறான். ஜீவனை உற்பத்திசெய்கிறான் **(Produces Life)**. ஆதாம் தன்னைப்போல குமாரனைக் கொண்டுவரவேண்டும். அந்தந்த விதையை உடைய கனிமரங்கள் அந்தந்தக் கனிகளைக் கொண்டுவரவேண்டும். அவர்கள் அதையெல்லாம் புசிக்கவேண்டும் **(Consumers)**. அதன்பின்பு எல்லாம் அழுகிப்போய் **(Decompose)** மறுபடியும் அது துளிர்த்து வருகிறது. மரம் வளர்கிறது, அது செத்து அழுகிப்போகிறது. மறுபடியும் அது துளிர்க்கிறது. எல்லாமே மண்ணோடு மண்ணாகப் போய், பின்பு அது புதியதாக வந்துக்கொண்டே இருக்கிறது. ஒன்று அழுகுகிறது. இன்னொன்று வளர்கிறது. அதுதான் வாழையடி வாழை என்று சொல்லுவார்கள். ஒரு வாழை அழியும், பக்கத்திலேயே இன்னொன்று வளரும். அந்த வாழை மரம் அழியாது. இவ்விதமாக ஜீவனை உற்பத்திப்பண்ணவேண்டும்.

அதைப் புசிக்கிறது, அதன்பின்பு ஜீவனை உற்பத்திப்பண்ணுவது. இப்படி ஆண்டவர் உண்டாக்கியிருக்கிறார். பிளாஸ்டிக்கை **(Plastic)** கொண்டுவந்தால்? மரம், செடி அழுகி அது பூமிக்கு உரமாக மாறிவிடுகிறது. மிருக ஜீவன்கள் மரித்தாலும், அவைகள் உரமாக மாறிவிடுகிறது. பிளாஸ்டிக்கை கொண்டுவந்தால் அது மக்குமா? மக்காது. அதுதான் உலகத்தை மாசுபடுத்துகிறது. டன் **(ton)** கணக்கில் பிளாஸ்டிக் குப்பைகள் இருக்கிறது. அவைகளை எங்கே கொண்டுபோய் போடுகிறது? இன்னும் இரசாயனக் கழிவுகள் இருக்கிறது. அவைகளை எங்கே கொண்டுபோய்க் கொட்டுகிறது? ஆண்டவர் அப்படி உண்டாக்கினாரா? இல்லை. ஆண்டவர் உண்டாக்கினது மறுபடியும் பிரயோஜனமாகிவிடும்.

அதைப்போல, சபையையும் **(Church)** ஆண்டவர் அப்படித்தான் வைத்திருக்கிறார். சபையை ஆண்டவர் ஒரு சுற்றுச்சூழலில் வைத்திருக்கிறார். அங்கே மரங்கள் இருக்கிறது. மரங்கள் எதைக் குறிக்கிறது? மனுஷர்களைக் குறிக்கிறது. அல்லேலூயா. அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; நாமெல்லாரும் ஒரு மரமாக இருக்கிறோம். நாம் ஜீவநதியண்டையிலே நடப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து அந்த மரமாக **(Bridegroom Tree)** இருந்தார். ரோம அரசாங்கம் அதை வெட்டினது. ஆனால், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அல்லேலூயா.

அதைப்போல, மணவாட்டி மரத்தை **(Bride Tree)** நாலுவிதமான பூச்சிகள் வந்து கெடுக்கிறது. ஆனால், மணவாட்டி மரம் இன்று திருப்பியளிக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா. முதலாவது இலைகளை சாப்பிடுகிறது. அது ஐக்கியத்தைக் **(Fellowship)** கெடுப்பதைக் குறிக்கிறது.

இரண்டாவது, கனிகளைச் **(Spiritual Fruits)** சாப்பிடுகிறது. பின்பு, பட்டையைச் சாப்பிடுகிறது. பட்டை உபதேசத்தைக் **(Doctrine)** குறிக்கிறது. பின்பு, மரத்தில் இருக்கிற சாறை உறிஞ்சிவிடுகிறது. அது ஜீவனை **(Life)** உறிஞ்சிவிடுகிறது. நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் என்று யோவேல் 2: 25ல் வாசிக்கிறோம். ஆனால் கர்த்தர் இன்றைக்கு மணவாட்டி மரத்தை திரும்ப கொண்டுவந்திருக்கிறார்.

சபையானது எப்படி இருக்கிறதென்றால், முதலாவது ஆண்டவர் வார்த்தையைக் கொடுக்கிறார். ஒரு போதகருக்கு ஆண்டவர் வார்த்தையைக் கொடுக்கவேண்டும். அதுதான் விசேஷித்த காரியம். அவர் பிரசங்கம்பண்ணும்போதெல்லாம் வார்த்தை வரவேண்டும். அவருடைய வாயில் தேவனுடைய வார்த்தை இருக்கவேண்டும். ஜீவ வார்த்தை **(Word of Life)** அங்கே இருக்கவேண்டும். அதன்பின்பு, ஆண்டவர் அந்த வார்த்தையைச் சுற்றிலும் ஐக்கியப்படுவதற்கு ஒரு சபையாரைக் கொண்டுவருகிறார். அதன்பின்பு சில உதவிக்காரர்களைக் கொடுக்கிறார். ஆராதனையில் பாடலை நடத்துகிறவர் **(Song Leader)** தேவை. இசைக் கருவிகளை வாசிப்பவர்கள் வேண்டும். கணினியில் செய்தியைப் பதிவு செய்யவேண்டும், இணையதளத்தில் செய்தியைக் கொடுக்கவேண்டும், சபையை சுத்தமாக வைக்கவேண்டும். இன்னும் அநேகக் காரியங்கள் இருக்கிறது. இப்படி ஒவ்வொருவரும் இந்த ஊழியத்தில் பிரயோஜனப்படுகிறார்கள். அல்லேலூயா. இவர்களெல்லாம் ஊழியத்தில் ஒரு பாகமாக **(Part of the Ministry)** மாறுகிறார்கள்.

முதலாவது வார்த்தை **(Word)**, இரண்டாவது ஊழியக்காரர் **(Minister)**, மூன்றாவது சபை **(Congregation)**, நாலாவது உதவிக்காரர்கள் **(Deacons)** என்று ஆண்டவர் ஒரு சபையை நல்ல சூழலில் வைக்கிறார். அதில் நாம் ஏதாவது ஒரு பங்கை எடுக்கவேண்டும். தேவனுடைய சேவையில் பங்குபெறவில்லையென்றால் அவருக்கு முன்பாக நாம் எப்படி நிற்கமுடியும்? “உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?” என்று ஆண்டவர் கேட்டால், நாம் என்ன சொல்லுவோம்? நாம் எல்லாருமே இந்தக் கடைசி கால ஊழியத்தில் **(End Time Ministry)** ஒரு பாகமாக இருக்கவேண்டும். நாம் இந்த ஊழியத்தை தாங்குகிறோம். ஆண்டவர் இங்கே ஒரு ஆவிக்குரிய சூழலை ஏற்படுத்துகிறார். சிலர் வரிசையை விட்டு விலகும்போது இந்தச் சூழ்நிலையைக் கெடுக்கிறார்கள். நாம் இந்தச் சூழ்நிலையைக் கெடுக்கக்கூடாது. வார்த்தையைப் போதிப்பதற்குத் தடையாக இருக்கக்கூடாது. ஊழியக்காரருக்கு எந்த விதத்திலும் பிரச்சனையை ஏற்படுத்தக்கூடாது. மற்றவர்களுக்கு நாம் எந்த விதத்திலும் இடறலாய் இருக்கக்கூடாது. ஊழியத்தில் நாம்

உதவியாளர்களாய் இருக்கவேண்டும். அப்படி இருந்தால், அந்தச் சபை சரியான சபையாய் இருக்கும். நம்முடைய சபை சரியாக இருக்கிறது. சிலர் வரிசையைவிட்டு விலகப்பார்க்கிறார்கள். அது சரியல்ல.

ஆண்டவர் ஒரு நல்ல சூழ்நிலையில் வைத்திருந்த இந்த உலகத்தை, மனுஷன் எப்படித் தன் சுயபுத்தியினால் கெடுத்துபோட்டானோ, அதைப்போலத்தான் சாத்தானும் ஊழியத்தைக் கெடுக்க வருவான். நாம் வரிசையில் வரவேண்டும் **(Line up with the Word)**. சகோ. பிரன்ஹாம் தன்னுடைய தரிசனத்தில், மணவாட்டி வரிசையில் வருகிறதைப் பார்க்கும்போது, சிலர் வரிசையைவிட்டு விலகும்போது, "வரிசையில் வாருங்கள்" என்று அவர் சத்தம்போடுகிறார். நாம் வரிசையில் வரவேண்டும். பறவைகள் **(Bird Life)**, மிருகங்கள் **(Animal Life)**, நீர்வாழும் ஜந்துக்கள் **(Marine Life)** என்று எல்லாமே சரியாக, இசைவாக இருக்கும்பொழுது, அந்தக் காட்சி எவ்வளவு நன்றாக இருக்கும்? அதே காட்சிதான் நம்முடைய சபையிலும் இருக்கவேண்டும். ஒரு உண்மையான ஆவிக்குரிய சூழ்நிலையில் **(Real Spiritual Atmosphere)** நாம் இருக்கவேண்டும். ஆமென்.

மனுஷன் பூமியைக் கெடுத்துவிட்டான். ஆனாலும், மனுஷனுக்கு ஒரு ஆசை இருக்கிறது. அந்த ஏதேனுக்குப் போகவேண்டும் என்று. அதைத் தன்னை அறியாமலேயே அவன் காண்பிக்கிறான். அவன் என்ன செய்கிறான்? ஒரு வீட்டைக் கட்டி அதைச் சுற்றிலும் செடிகளை வைக்கிறான். அழகான சூழ்நிலை இருக்கவேண்டும் என்று நினைக்கிறான். ஏதேனுக்குப் போகவேண்டும் என்ற விருப்பம் அவனுக்குள் இருப்பதை அது வெளிப்படுத்துகிறது. வீட்டில் மரம், செடிகள் **(Botany Life)** இருந்தால்தான் நன்றாக இருக்கும். பிள்ளைகள், மீன்களை வளர்க்கவேண்டும் **(Marine Life)** என்று ஆசைப்படுகிறார்கள். அதுமாத்திரமல்ல, புறா வளர்க்கவேண்டும் **(Bird Life)** என்று விரும்புகிறார்கள். அடியேனின் மனைவிக்கு பூஞ்செடிகளை வளர்ப்பதில் அதிக ஆசை. எனக்கு, கத்தரிக்காய், தக்காளி பழம், தென்னை மரம் இதெல்லாம் வைக்கவேண்டும் என்று விருப்பம். ஒரு காலத்தில் நான் அதைச் செய்தேன். இப்பொழுது அதற்கு இடமில்லை. என் மகனுக்கு புறா வளர்க்கவேண்டும் என்று ஆசை. பேரப் பிள்ளைகளுக்கு மீன் வளர்ப்பதில் ஆசை. இதெல்லாம், நாம் ஏதேனுக்குப் போகவேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆழத்தை நோக்கி ஆழம் கூப்பிடுகிறது **(Deep calleth unto deep)** அல்லேலூயா. நமக்குள்ளே ஒரு வாஞ்சை **(Earnest desire)** இருக்கிறது. அந்த ஏதேன் எப்படி இருந்தது! எவ்வளவு அழகாக இருந்தது! அல்லேலூயா.

மனுஷன் இன்றைக்கு செயற்கையாய் உற்பத்திசெய்கிறான். அப்பொழுது மித சீதோஷ்ண நிலை **(temperature)** இருந்தது. மனுஷன் இன்றைக்கு செயற்கையாய் குளிர்சாதன வசதியை ஏற்படுத்துகிறான். நாம்

ஏதேனுக்குப் போகவேண்டும் என்று விரும்புகிறோம். அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம். ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. . எதற்காக? அது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெறவேண்டும் என்பதற்காக. அல்லேலூயா. எத்தனைப் பேர் ஏதேனுக்குப் போகவேண்டும் என்று நினைக்கிறீர்கள்? அங்கே ஆவிக்குரிய சூழ்நிலை இருக்கும். பாவிகளும், போக்கிரிகளும் அங்கே இருக்கமாட்டார்கள். குடிகாரர்கள் இருக்கமாட்டார்கள். மோசமான அரசியல் அங்கே இருக்காது. அரசியல் ஒரு சாக்கடையாக இருக்கிறது.

இன்றைக்கு ஆண்டவர் இறங்கி வந்திருக்கிறார். அல்லேலூயா. அவர் சுகமளிக்க மாத்திரம் இறங்கி வந்தாரா? இல்லை. நமக்கு உரிமைப் பத்திரத்தைக் **(Title Deed)** கொண்டுவந்திருக்கிறார். அல்லேலூயா. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; இந்த உலகத்தை ஏதேனாக மாற்றுவதற்காக அவர் இறங்கி வந்திருக்கிறார். அதற்கு முன்னதாக ஒரு ஜனத்தை தம்மண்டை இழுக்கிறார். உங்களோடும் என்னோடும் பேசுகிறார். நான் ஏன் கடினமாகப் போதிக்கிறேன்? உங்களை அந்த ஏதேனுக்குக் கொண்டுபோகவேண்டும் என்பதற்காக. நீங்கள் பாதாளத்திற்குப் போகக்கூடாது என்பதற்காக. "சினிமாவைப் பார்த்துப் பார்த்துப் பாதாளத்திற்குப் போகாதே, அவிசுவாசியோடு ஐக்கியப்பட்டுப் பாதாளத்திற்குப் போகாதே, நீ அங்கே போகாதே, நீ ஏதேனுக்கு வா" என்று ஆண்டவர் இழுக்கிறார். அல்லேலூயா. இப்பொழுது ஏதேன் வரவேண்டிய நேரம்.

நம்முடைய சரீரம் எடுத்துக்கொள்ளப்படுதலை **(Rapture)** எதிர்நோக்கியிருக்கிறது. அல்லேலூயா. நாம் வார்த்தையைக் கேட்க கேட்க, நமக்குச் சுகம் வந்துவிடுகிறது. மருந்து, மாத்திரை, மருத்தவரிடம் போவதெல்லாம் குறைந்துபோகிறது. நம்முடைய சரீரம் எடுத்துக்கொள்ளப்படும் நிலைமைக்கு மாறிக்கொண்டிருக்கிறது **(Our bodies have already turned heavenly)**. தேவனுடைய வார்த்தையினால் நாம் அதிகமாக போஷிக்கப்படும்போது **(feed upon the Word of God)**, நம்முடைய சரீரம் எடுத்துக்கொள்ளப்படும் நிலைக்கு **(Rapturing Condition)** வந்துவிடுகிறது. அல்லேலூயா. தேவனுடைய வார்த்தையில் நமக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் வரும்போது, நமக்கு வியாதி நீங்கிவிடுகிறது. எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்?

நமக்கு இன்றைக்குக் கீழ்ப்படிதல் **(Obedience)** தேவை. “ஆண்டவரே, உம்முடைய ராஜ்யம் வருவதாக” என்று அழைக்கிறோம். நாலு எக்காளங்கள் ஊதப்படும்போது, எல்லாமே கெட்டுப்போனது. இன்றைக்கு எல்லாமே மாசுபட்டிருக்கிறது. ஆண்டவர் இறங்கி வந்திருக்கிறார், உரிமைப் பத்திரத்தை அவர் தந்தபின்புதான் நாம் அந்த சுதந்தரத்துக்குப் போகப்போகிறோம். ஆதாமுக்கு இந்தக் கடல் முதல் அந்தக் கடல்வரை **(From Coast to Coast)** எல்லாமே சொந்தம். ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொல்லும்போது, “லீபனோன் முதற்கொண்டு அந்தப் பெரிய சமுத்திரம் வரைக்கும் எல்லாம் உங்களுக்குச் சொந்தம்” என்று சொன்னார். அல்லேலூயா. “கானான் தேசத்தை **(Land of Canaan)** நான் உங்களுக்குத் தருகிறேன்” என்று சொன்னார். ஒருவன் கடன்பட்டுப் போனால் அவனுக்கு அதிலிருந்து விடுதலையாக வழி இருக்கிறது. ஐம்பதாவது வருடம் வரும்போது, யூபிலி எக்காளம் தொனிக்கும்போது அவனுக்கு விடுதலைக் கிடைக்கிறது.

பாவநிவிர்த்தி பண்டிகை அன்றைக்கு எக்காளச் சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்.

**லேவியராகமம் 25: 9**

9. அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்; பாவநிவாரண நாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்.

அவர்கள் நானூறு வருடங்களாக எகிப்தில் அடிமைகளாக இருக்கிறார்கள். அவர்கள் கானானில் பிறக்கவேண்டியவர்கள். எகிப்துக்குப் போனதால் அங்கே பிறந்திருக்கிறார்கள். ஆனால் ஆண்டவர் அவர்களுக்குக் கானான் தேசத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். அதைப்போல, நாம் ஏதேனில் பிறக்கவேண்டியவர்கள். ஆனால் இந்தப் பாவ உலகத்தில் பிறந்திருக்கிறோம். ஆண்டவர் நமக்கு ஏதேனை வாக்குப்பண்ணியிருக்கிறார். நாம் ஏதேனுக்குத் திரும்பிப் போகிறோம். அல்லேலூயா. நாம், காலம் **(Time)** என்னும் திரைக்குள் அடைப்பட்டிருக்கிறோம். அதைத்தாண்டி நாம் நித்தியத்திற்குப் **(Eternity)** போகவேண்டும். இது, நாம் ஏதேனுக்குப் போகவேண்டிய நேரம். அல்லேலூயா.

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்கு போனபின்பு, யாராவது தங்களுடைய சுதந்தரத்தை இழந்துபோனால், அதை மீட்பதற்கு அவர்களால் முடியவில்லையென்றால், அதற்காக ஆண்டவர் அவர்களுக்கு ஒரு யூபிலி **(Jubile)** வருஷத்தை வைத்திருக்கிறார். அல்லேலூயா. பாவநிவிர்த்தி பண்டிகை அன்றைக்கு, எழாம் மாதம் 10ம் தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும். அந்த எக்காளச் சத்தம்

தொனிக்கும்போது, அந்த ஐம்பதாம் வருஷத்திலே, அது யூபிலி வருஷமாக இருக்கிறது.

## லேவியராகமம் 25: 10

10. ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்; அது உங்களுக்கு யூபிலி வருஷம்; அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்துக்கும் திரும்பிப்போகக்கடவன்.

அப்பொழுது அவர்கள் நிலங்களும், வீடுகளும் அடைமானத்தில் இருக்கலாம். சிலர் அடிமைகளாக மாறியிருப்பார்கள். தன்னையே விற்றுப்போட்டிருப்பார்கள், அல்லது தங்களுடைய மகனையும் மகளையும் விற்றுப்போட்டிருக்கலாம். இப்பொழுது, யூபிலி எக்காளம் **(Trumpet of Jubile)** ஊதும்போது, அவர்கள் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு, தங்கள் வீட்டிற்குப் போகலாம். அல்லேலூயா. அடைமானத்தில் இருந்த வீடுகள் அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். அவர்களின் சொத்தை யாரும் எடுக்கமுடியாது. அவர்கள் சுதந்தரம் என்றைக்குமே அவர்களுக்குத்தான் சொந்தம். அவர்கள் விற்றுப்போட்டாலும், யூபிலி வரும்போது அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். அல்லேலூயா. ஆண்டவர் அப்படி ஒரு மீட்பை **(Redemption of the Earth)** வைத்திருந்தார். அந்தக் கானான் தேசத்திற்குத்தான் அப்படி ஒரு திட்டம் **(Plan of Redemption)** உண்டு. எதற்கு? அந்த பூமிக்கு.

அதைப்போல, இந்தப் பூமிக்கும் ஆண்டவர் ஒரு மீட்பின் திட்டத்தை வைத்திருக்கிறார். அல்லேலூயா. ஒரு காலத்தில் இது ஏதேனாக இருந்தது. மனுஷன் இதைக் கெடுத்துப்போட்டுவிட்டான். மறுபடியும் அந்த உயிரன வாழ்க்கைச் சூழலைக் **(Ecological System)** கொண்டுவருகிறதற்கு, நல்ல சுற்றுச்சூழலை கொண்டுவருகிறதற்கு, ஆண்டவர் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அல்லேலூயா. அதற்கு யூபிலி வருடம் வரவேண்டும். குறித்த காலம் **(Appointed Time)** வரவேண்டும். அப்பொழுது எக்காளம் ஊதவேண்டும். அந்த எக்காளம் எது? கிருபையின் செய்தி **(Message of Grace)**. அல்லேலூயா. சகோ. பிரன்ஹாம் **“கிருபையின் செய்தி”** என்ற தலைப்பில் செய்தி கொடுத்திருக்கிறார். அந்தக் கிருபையின் செய்திதான் ஏழாம் எக்காளம் **(Seventh Trumpet)**. அது ஏழாம் தூதனுடைய செய்தி. அல்லேலூயா. இப்பொழுது, 49 **(7 x 7 = 49)** வருடங்கள் முடிந்துவிட்டது. ஏழு தசாப்தங்கள் **(7 decades)**. எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் ஏழு சபைக்காலங்கள் **(7 Church Ages)** முடிந்துவிட்டது. உரிமைப் பத்திரம் **(Title Deed)** வந்திருக்கிறது. எக்காளம் ஊதும்போது, நாம் ஏதேனின் பரிபூரணத்தில் **(Edenic Perfection)** வரவேண்டும். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? இன்றைக்கு ஆண்டவர் ஒரு செய்தியைக் **(Message)** கொடுத்து நம்மை இழுக்கிறார். அதுதான்

கிருபையின் செய்தி. அல்லேலூயா. ஏழாம் தூதனுடைய செய்தி. “எக்காளச் சத்தத்தைக் கேட்கும்போது, நீ அடிமைத்தனத்தில் இருந்து விடுதலைப்பெற்று வா” என்று ஆண்டவர் சொல்லுகிறார். எங்கே வரவேண்டும்? நம்முடைய காணியாட்சிக்கு வரவேண்டும். நம்முடைய சுதந்தரத்துக்கு **(Inheritance)** வரவேண்டும். தேவபுத்திரர்கள் இந்த உலகத்தைச் சுதந்தரிக்க வேண்டிய நேரம் வந்திருக்கிறது. அல்லேலூயா.

கிருபையின் செய்தியை ஆண்டவர் அனுப்பியிருக்கிறார். யூபிலி எக்காளம் இப்பொழுது ஊதப்படுகிறது. சாத்தான் நம்முடைய இடத்தை ஆக்கிரமிப்புச் **(Squatter)** செய்திருக்கிறான். அவன் ஒரு **Squatter** என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார் **(61-0618 - Revelation Chapter Five – Part 2 Satan is a squatter. Christ came as a Kinsman Redeemer and redeemed it back to us. He will be cast into the lake of fire. The heirs of salvation will come with Christ)**. ஆண்டவர் கிரயத்தைச் செலுத்திவிட்டார். கிரயத்தைச் செலுத்தியும், இரண்டாயிரம் வருடங்களாக சாத்தான் இடத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறான். இரண்டாயிரம் வருடங்களாகப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. பின்பு அவன் பிடியைத் தளரவிடுவான். அவன் அக்கினிக் கடலில் தள்ளப்படுவான். அல்லேலூயா. இரட்சிப்பைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களாகிய **(Heirs of Salvation)** நாம் இந்தப் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வோம். ஆமென்.

யூபிலி எக்காளம் ஊதும்போது, ஏழாவது எக்காளம் ஊதும்போது, இந்தப் பூமிக்கு உண்மையான சொந்தக்காரராகிய தேவன் வருகிறார். அப்பொழுது ஆக்கிரமிப்புக்காரன் ஓடிப்போவான். அல்லேலூயா. சாத்தான் ஓடிப்போவான். இந்தப் பூமி கர்த்தருடைய பிள்ளைகளுக்குச் சொந்தமாகும். அல்லேலூயா. தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை **(Proclaim liberty throughout all the land - Levi 25: 10)**. அல்லேலூயா. துன்மார்க்கர் உலகத்தை விடவேண்டும். அவர்கள் உலகத்தை அனுபவிக்க முடியாது. அரசியல்வாதிகள் இந்த உலகத்தை விடவேண்டும். அவர்கள் இனிமேல் ஆட்சி செய்யமுடியாது. “நீ பூமியைத் தோண்டித் தோண்டி எல்லா வளங்களையும் எடுத்துவிட்டாய். நீ சமுத்திரத்தைக் கெடுத்துவிட்டாய். மரங்களையெல்லாம் வெட்டிப்போட்டாய். எல்லாவற்றையும் நாசமாக்கிப்போட்டாய். இனிமேல் உங்களுக்கு இந்தப் பூமியின்மேல் ஆதிக்கம் இல்லை. எல்லாரும் அக்கினிக் கடலுக்குப் போங்கள். சாத்தானும் அவனுடைய கூட்டத்தார் எல்லாருமே அக்கினிக் கடலுக்குப் போங்கள். என்னுடைய பிள்ளைகளோடு நான் வந்திருக்கிறேன். இந்தப் பூமி என் பிள்ளைகளுக்குச் சொந்தம். இடத்தைவிட்டுப் போங்கள்” என்று கர்த்தர் சொல்லுவார். அல்லேலூயா.

ராஜாதி ராஜன் இயேசுகிறிஸ்து வரப்போகிறார். அல்லேலூயா. அவர் ஒப்பற்ற நியாயாதிபதியாக **(Supreme Judge)** வரும்போது, பாவிகள்

இந்த உலகத்தைவிட்டு நீங்கிப்போவார்கள். ஸ்தாபன மக்கள், தங்கள் மனம்போல வாழ்ந்து, ஆண்டவர் கொடுத்த கிருபையின் நாட்களை பாவத்தில் செலவுபண்ணிப் போட்டார்கள். ஆண்டவர் ஒவ்வொரு நாளும் கிருபையாக கொடுக்கிறார். இந்த நாளில் இயேசுவுக்காக வாழவேண்டும். பாவத்திற்காகவா ஜீவிப்பது? ஒவ்வொரு நாளும் உயிரோடிருப்பது அவருடைய கிருபை. இந்தக் கிருபையின் நாட்களில் நாம் எப்படி ஜீவிக்கவேண்டும்! அவருடைய ராஜ்யம் வருவதாக. அல்லேலூயா.

விடுதலையைக் கூறுவதுதான் **(Proclaiming Liberty)** இன்றைக்குச் செய்தி. நமக்கு அது விடுதலையைத் தருகிறது. ஆதாம் தன்னுடைய சதந்தரத்துக்கு வருகிறான். ஏவாள் வருகிறாள். சபையும் வருகிறது. ஆதாம் கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறான். கிறிஸ்து வருகிறார். அவருடைய பரிசுத்தவான்கள் வருகிறார்கள். அல்லேலூயா.

உங்களுடைய வாக்குத்தத்தத்தை யாரும் எடுக்கமுடியாது **(No man can take your pormise)**. உங்களுடைய எல்லையை யாரும் குறைக்கமுடியாது **(No man can shorten your boundary)**. உலகம் முழுவதும் நம்முடையதாகும். அல்லேலூயா. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? இயேசுகிறிஸ்துதான் சட்டப்பூர்வமானச் சொந்தக்காரர் **(Legal Owner)**. அல்லேலூயா. நாம் அவருடைய வாரிசாக இருக்கிறோம். இரட்சிப்பைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம். அவர் தம்முடைய வாரிசோடு வந்து, இந்த உலகத்தை ஆட்சிசெய்யும்போது, பாவிகள் நிர்மூலமாவார்கள். அல்லேலூயா. அதுதான் ஏழாவது எக்காளம்.

**வெளிப்படுத்தல் 11: 15 – 19**

15. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.

16. அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள்மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து:

17. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்; தேவரீர் உமது மகா வல்லமையைக்கொண்டு ராஜ்யபாரம்பண்ணுகிறீர்.

18. ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்.

19. அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின.

இந்த ஏழாவது எக்காளம், கிருபையின் செய்தியாக இருக்கிறது. இது இயேசுகிறிஸ்துவும் அவருடைய பிள்ளைகளும் ஆட்சிசெய்யவேண்டிய நேரம். ஆக்கிரமிப்புக்காரர்கள் அக்கினிக் கடலுக்குப் போகவேண்டிய நேரம்.

## வெளிப்படுத்தல் 20: 6, 14, 15

6. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

14. அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.

15. ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

பாவிகள், துன்மார்க்கர், தேவபயம் இல்லாதவர்கள், அசட்டைக்காரர்கள், பின்வாங்கிப்போனவர்கள், அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள், இன்னும் இந்தப் பூமியைக் கெடுத்த அனைவரும் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள். மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. சாத்தான் மரணமாயிருக்கிறான். அவன் அக்கினிக் கடலில் தள்ளப்படுவான். தேவனுடைய வார்த்தை சத்தியம். அது நிறைவேற வேண்டிய நேரத்தில் நாம் இருக்கிறோம். காலம் அதிகமாகக் கடந்துப்போனது. ஏழாவது எக்காளம் இப்பொழுது முழங்கிக்கொண்டிருக்கிறது. அதுதான் யூபிலி எக்காளம். அதுதான் கிருபையின் செய்தி. அல்லேலூயா. நாமெல்லாரும் ஜெபம் செய்வோம்.

தேவனுடைய வார்த்தை சத்தியம். இது மனுஷனுடைய வார்த்தை அல்ல. தேவனுடைய வார்த்தை, தீர்க்கதரிசி செய்தியுடன் பொருந்துகிறது. இது வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாக **(Revealed Word)** இருக்கிறது. இதுவரைக்கும், அது முத்திரிக்கப்பட்ட வார்த்தையாக இருந்தது. இப்பொழுது, வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அது ஒரு மணவாட்டியைக் கொண்டுவருகிறது. இதோ, ஏதேனின் பரிபூரணத்திற்கு **(Edenic Perfection)** நாம் போகப்போகிறோம். மனுஷன் அதை வாஞ்சிக்கிறான். ஆனால், எப்படிப் போகவேண்டும் என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆண்டவர் இன்றைக்கு நமக்கு வழியைத் தெரியப்படுத்தியிருக்கிறார். யூபிலி எக்காளம் இப்பொழுது முழங்குகிறது. கிருபையின் செய்தி இன்றைக்கு வந்திருக்கிறது. நாம் நியாயத்தீர்ப்புக்குள் போகாதபடி, கிருபையைப் பற்றிக்கொள்வோம். எல்லாரும் கர்த்தரை நோக்கி நாம் ஜெபிக்கலாம்.

ஆண்டவரே, உமக்கு ஸ்தோத்திரம். "அந்த ஏதேனின் பரிபூரணத்திற்கு என்னைக் கொண்டுபோவீராக, அந்த அருமையான சுற்றுச்சூழலில் நான் இருக்க விரும்புகிறேன், என்னை அதற்கென்று ஆயத்தப்படுத்தும், கிருபையின் செய்திக்கு நான் கீழ்ப்படிய எனக்குக்

கிருபை தாரும்” என்று சொல்லி, நாம் எல்லாரும் கர்த்தரை நோக்கி ஜெபிக்கலாம்.

எங்களை நேசிக்கிற நல்ல இயேசுவே உம்மைத் துதிக்கிறோம். வானத்தையும் பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும் நீர் சிருஷ்டித்தீர். நல்ல ஒரு சுற்றுச்சூழல் இருந்தது. ஆதாமும் ஏவாளும் அந்த ஏதேனின் பரிபூரணத்தில் வாழ்ந்தார்கள். அவர்கள் பாவத்தினாலே வீழ்ச்சியடைந்ததால், நாங்கள் ஏதேனுக்கு வெளியே பிறந்திருக்கிறோம். நாங்கள் ஏதேனுக்குள் போகப் பிரயாசப்படுகிறோம். அந்த நாலு எக்காளங்களில் எழுதியிருக்கிற வண்ணமாக, மனுஷன் தன்னுடைய அறிவினாலும், விஞ்ஞாத்தினாலும், பூமியையும், சமுத்திரத்தையும், நீரூற்றுகளையும், ஆறுகளையும், சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் எல்லாவற்றையும் கெடுத்துப்போட்டு விட்டான்.

வாழமுடியாத ஒரு சூழ்நிலை இப்பொழுது உலகத்தில் இருக்கிறது. அமில மழை **(Acidic Rain)** பெய்கிறது, ஏரிகளில் சாந்துக்கலவைகளைப் **(Plaster of Paris)** போட்டு, மீன்கள் செத்துப்போகிறது. இவ்விதமாக, நீரூற்றுகள், ஏரிகளையெல்லாம் மனுஷன் கெடுத்துவிட்டான். பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுப்பதற்குக் காலம் வந்தது. ஏழாம் தூதனுடைய செய்தி கிருபையின் செய்தியாக இருக்கிறது. அது எங்களுக்கு யூபிலி எக்காளமாக இருக்கிறது. உலகத்துக்கு அது நியாயத்தீர்ப்பின் செய்தியாக இருக்கிறது. நாங்கள் ஏதேனுக்கு திரும்ப வேண்டிய நேரம். ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுடைய பிடியைத் தளரவிடவேண்டிய நேரம். நீர் இந்த வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தீர். கடல்மேல் நடந்தீர். ஆண்டவரே, நீர் மறுபடியும் இதை திரும்பியளிக்கப் **(Restore)** போகிறீர். நாங்கள் அந்த ஏதேனின் பரிபூரணத்திற்குத் திரும்பப்போகிறோம். அதற்கு ஒரு மீட்பின் திட்டத்தை **(Plan of Redemption)** வைத்திருக்கிறீர். அதைத்தான் இந்த எக்காளங்கள் சொல்லுகிறது.

இந்த எக்காளங்கள், இஸ்ரவேல் ஜனங்கள் எப்படி மீட்கப்படுகிறார்கள், பூமி எப்படி மீட்கப்படுகிறது, என்ற இரகசியத்தை வெளிப்படுத்துகிறது. முத்திரைகள் திறக்கப்படும்போது, மறைந்திருந்த தேவனுடைய சிந்தை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் அதை உம்முடைய வேதத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாங்கள் எந்த நேரத்தில் இருக்கிறோம், இப்பொழுது எவ்விதமாக வாழவேண்டும், எவ்விதமாக நாங்கள் ஆயத்தப்படவேண்டும் என்று கவனிக்கிறோம். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். உம்முடைய ராஜ்யம் இந்தப் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவதுபோல இந்தப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. இயேசுவே, உம்மை அழைக்கிறோம். நாங்கள் உம்மை எதிர்நோக்கியிருக்கிறோம். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வசனத்தைக் கேட்ட

அனைவரையும் ஆசீர்வதிப்பீராக. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.